உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மெய்கண்ட சுவாமிகள் திருவடி போற்றி !

உண்மை விளக்கம்

திருவாவடுதுறை ஆதீன குருமுதல்வர்
அருள்திரு நமசிவாய மூர்த்திகள்

திருவாவடுதுறை ஆதீனம், 23-வது குருமகா சன்னிதானம்
ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

சைவ சித்தாந்த சபை, சங்கரன்கோவில்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க !

வெளியீடு எண் : 70

திருவதிகை

ஸ்ரீ மனவாசகங் கடந்தார்

அருளிச் செய்த

உண்மை விளக்கம்

பதவுரை

"சித்தாந்த பண்டித பூஷணம்"

சிவஸ்ரீ. ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை அவர்கள்

மறுபதிப்பு :

சைவ சித்தாந்த சபையார்,

246, வடக்கு ரதவீதி,

சங்கரன்கோவில்.

2008

உ

திருச்சிற்றம்பலம்

உ

திருநிருத்தப் பயன்

(செய்யுள் 38)

சிவபிரான் ஆடும் இடமும் அருள், எடுக்குந் திருமேனிகளும் அருள், ஆட்டத்தை உயிர்களின் பொருட்டுத் தரிசித்துக் கொண்டிருப்பதும் அருள், அவர் கொள்ளும் அருட்டிருமேனி அதிசூக்கும வடிவம், உயிரைத் திருமேனியாகக் கொள்வது சூக்கும வடிவம், பஞ்சாக்கரத் திருமேனி தூல வடிவம். அருளால் இயக்கப்படுவது உயிர். பஞ்சகிருத்திய சத்திகள் பஞ்சாக்கரம். திருநிருத்தத்தை விரும்பி வழிபடும் பாக்கியமுடையார்க்குப் பிறவி நோய் நீங்கும்.

உ

சிவமயம்

நடராசர் - நடனம்

(செய்யுள் 32 - 37)

பஞ்சாக்கரம் நடராசர் திருமேனியாயிற்று.

திருப்பாதத்தில்	ந	தூல பஞ்சாக்கரம்
திருவயிற்றில்	ம	
திருத்தோளில்	சி	
திருமுகத்தில்	வ	
திருமுடியில்	ய	

நடராசரின் அவயவங்களும் பஞ்சாக்கரம்

உடுக்கு உள்ள திருக்கரத்தில்	சி	சூக்கும பஞ்சாக்கரம்
வீசிய திருக்கரத்தில்	வ	
அபயக் குறி காட்டும் திருக்கரத்தில்	ய	
அக்கினி ஏந்திய திருக்கரத்தில்	ந	
முயலகன் அழுந்திப் பொருந்துகின்ற திருவடியில்	ம	
திருவாசி	ஓம்	
அதன் உள்ளொளி	பஞ்சாக்கரம்	

நடராசரின் ஊன நாடகம்

உடுக்க ஏந்திய திருக்கரத்தில்	சிருஷ்டி
அமைத்த திருக்கரத்தில்	திதி
அக்கினி ஏந்திய திருக்கரத்தில்	சங்காரம்
ஊன்றியிருக்கிற திருவடியில்	திரோபவம்
குஞ்சித்த திருவடியில்	அனுக்கிரகம்

நடராசரின் ஞான நாடகம்

பக்குவான்மாவின் மாயா மலத்தை	நீக்கி
கன்ம மலத்தை	தகித்து
ஆணவமலத்தை	அதன் சக்தி கெடும்படி கீழ்படுத்தி
அவ்வான்மாவை தம் திருவருளில்	வைத்து
பேரின்பக்கடலில்	மூழ்குவித்தல்

அவர் செய்யும் ஆனந்த நாடகம்

சிவஞானிகள் துய்த்துவரும் பேரின்பத்தைப் பெருக்கிக் கொண்டிருப்பது தில்லையில் எழுந்தருளியுள்ள ஆனந்தத் தாண்டவ மூர்த்தியின் தரிசனம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனம்
23 - ஆவது குரு மகா சன்னிதானம்
சீர் வளர் சீர் சிவப்பிரகாச தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்

திருவாவடுதுறை - 609 803
நாகை மாவட்டம்
தொலைபேசி எண்: 04364-232021

நாள்: 21.10.08

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க

'அருள் வாழ்த்துரை'

'அஞ்செழுத்தே ஆகமமும் அண்ணல் அருமறையும்
அஞ்செழுத்தே ஆதிபுராணம் அனைத்தும்-அஞ்செழுத்தே
ஆனந்த தாண்டவமும் ஆறாறுக் கப்பாலாம்
மோனந்த மாமுத்தியும்'

... – உண்மை விளக்கம்.

சங்கரன்கோயில் சைவசித்தாந்த சபை 7.11.08 அன்று சபையின் ஸ்தாபகர் சிவஸ்ரீ ஈசுவரமூர்த்திப்பிள்ளை மற்றும் ஆசிரியர் வித்வான் சிவஸ்ரீ ச. இரத்தினவேலன் ஞாபகார்த்தமாக சித்தாந்த சாத்திர நூல்களில் ஒன்றாகிய உண்மை விளக்க நூலினை ஈசுவரமூர்த்திப் பிள்ளை அவர்களின் புத்துரையுடன் வெளியிட இருப்பது அறிந்தோம்.

சைவ சித்தாந்தம் உடன்படும் முப்பத்தாறு தத்துவங்களை முதன்முதல் விரிவாகவும், நுட்பமாகவும் உண்மை விளக்கமே எடுத்துரைக்கின்றது. வினாவிடை அமைப்பில் அமைந்த முதல் சைவ சித்தாந்த நூலும் இதுவே. நடராஜர் தத்துவத்தை அழகுற விளக்கும் சிறப்பும் இதற்கு உண்டு. சைவ சித்தாந்தம் பயில்வோர்க்கு முதற்படி நூலாக விளங்கும் சிறப்பும் இந்நூலுக்கு உண்டு.

சைவ சித்தாந்த சபை உண்மை விளக்க நூலினை மறுபதிப்பாக வெளியிட்டு நம் சமய உண்மைகளை அனைவரும் எளிதில் அறிந்துணரும் வகையில் உரை விளக்கத்துடன் தர இருப்பது போற்றத்தக்கது.

சபையின் பணி மேன்மேலும் சிறக்கவும் ச. இரத்தினவேலன் அவர்களின் திதிவிழா இனிதே நிகழவும் நமது ஞானமா நடராசப்பெருமான் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

திருவாவடுதுறை ஆதீனம் * திருவாவடுதுறை

இணைப்பு: திருநீற்பச்செல்வம்

பெறுநர்: திரு. ஆர். உடையப்பன் அவர்கள், செயலாளர்,
சைவசித்தாந்த சபை, 246, வடக்குரத வீதி,
சங்கரன்கோவில்- 627 756.

திருச்சிற்றம்பலம்

"திருக்கயிலாய பரம்பரை" கொங்கு மண்டலக்குரு

ஸ்ரீ மாணிக்கவாசகர் திருமடாலய 57 வது மகா சந்நிதானம்

ஸ்ரீ.ல.ஸ்ரீ இராஜ. சரவணமாணிக்கவாசக சுவாமிகள்

கூனம்பட்டி கல்யாணபுரி ஆதீனம்

பல்லகவுண்டம்பாளையம் (Po), விஜயமங்கலம் - 638 056.

போன் : 04294 242056 செல் : 94421 42056

உ

17/10/08

நமது நல்லாசிக்குரிய சைவ சித்தாந்த சபைச் செயலாளர் அவர்கட்கு, சந்நிதானத்திலிருந்து எழுதிக் கொண்ட ஆசிர்வாதம், நலம்.

உங்கள் கடிதம் கண்டு மகிழ்ந்தோம்.

சபையின் ஆசிரியராகத் திகழ்ந்த வித்வான் சிவச்செல்வர் ச. இரத்னவேலன் அய்யா அவர்களின் நினைவு நாளில் சபையின் ஸ்தாபகர் "சிவச்செல்வர் ஆ. ஈசுரமூர்த்தி பிள்ளை" அவர்களின் புத்துரையோடு **"உண்மை விளக்கம்"** சாத்திர நூலை மறு பதிப்பாக வெளியிடுவது மிக மிகப் பொருத்தமாகும். பாராட்டுதலுக்குரியதுவும் ஆகும். சபைக்கே உரிய பாணியில் பிறவா நெறியைத் தரவல்ல பெருமானுடைய சிறப்புக்களைக் கூறும் இதுபோன்ற சாத்திர நூல்களை முறையோடு வெளியிடுவது மிகவும் பெருமைக்குரியதாகும். பல குழப்பங்களோடு வாழ்ந்து வரும் மக்களுக்கு இது ஒரு அருமருந்தாகும். இதுபோன்று அரிய செயல்களைச் சபை என்றென்றும் செய்து பலருக்கும் உதாரணமாகத் திகழ வாழ்த்தி ஆசிர்வதிக்கிறோம்.

நிறைந்த ஆசிகள்...

உ

சிவமயம்

மறு பதிப்புரை

சைவ சமய மக்களுக்குப் பிரமாண நூல்கள் நான்கு வேதங்கள், 28 சிவாகமங்கள், 18 புராணங்கள், பன்னிரு திருமுறைகள், 14 சித்தாந்த சாத்திரங்கள் ஆகும். இதில் 14 சித்தாந்த சாத்திரங்களும் பதி, பசு, பாசம் பற்றிய விபரங்களைத் தெளிவாகப் பேசி ஆன்மாவின் முத்திக்கு வழியினைத் தெளிவாகப் பேசும். இந்த 14 சாத்திரங்களில், சித்தியார், சிவஞான போதம் இவற்றிற்கு சிவஞான சுவாமிகள் போன்ற அருளாளர்களின் விரிவுரைகள் நமக்குக் கிடைத்துள்ளன. எஞ்சிய 12 சாத்திரங்களுக்கும் சங்கரன்கோவில் சைவ சித்தாந்த சபையின் நிறுவனர் சித்தாந்த பண்டித பூஷணம் பேட்டை சிவஸ்ரீ. ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை அவர்கள் தெளிவாக பதவுரை எழுதியுள்ளார்கள். எல்லோருக்கும் மிக எளிமையாக விளங்கும் வகையில் உள்ள இவ்வுரையைப் படித்து ஆன்மீகப் பெருமக்கள் அனைவரும் பயனடைய வேண்டும் என்ற பெருநோக்கோடு சைவ சித்தாந்த சபை இவ்வுரை நூல்களைப் பதிப்பித்துள்ளது. இதில் **"உண்மை விளக்கம்"** என்ற சாத்திரத்திற்கு பழனி காசிவாசி சித்தாந்தசரபம் மகாமகோபாத்தியாய சிவாகம ஞானபானு சிவஸ்ரீ. ஈசான சிவாச்சாரியார் அவர்கள் ஆசியுடன் 4.1.1960-ல் நெல்லை சித்தாந்த சைவச் செந்நெறிக் கழகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. அப்பிரதிகள் தற்போது கிடைப்பதற்கு அரிதாகிவிட்டதால் ஆன்மீகப் பெருமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க மறு பதிப்பாக சங்கரன்கோவில் சைவ சித்தாந்த சபையின் ஆசிரியர் சைவ சித்தாந்தப் பேரொளி சித்தாந்த சைவ நன்மணி சிவஸ்ரீ. ச. இரத்னவேலன் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு விழாவில் வெளியிடப்படுகிறது.

ஆன்மீகப் பெருமக்கள் இவ்வரிய நூலைப் பயின்று பெரும் பேறு பெற்றுய்ய வேண்டுகிறோம்.

இவண்,

சைவ சித்தாந்த சபையார்

சங்கரன்கோவில்

7-11-08

உ

சிவமயம்

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க

திருவதிகை மனவாசகங் கடந்தார்

அருளிய

உண்மை விளக்கம்

புத்துரை

காப்பு

விநாயக வணக்கம்

வண்மைதரு மாகமநூல் வைத்த பொருள்வழுவா
வுண்மை விளக்க முரைசெய்யத் - திண்மதஞ்சே
ரந்திநிறத் தந்திமுகத் தொந்திவயிற் றைங்கரனைப்
பந்தமறப் புந்தியுள்வைப் பாம்.

வண்மை	-	(வேதத்தின் ஞான) வளத்தை
தரும்	-	விளக்கிச் சொல்லுகிற
ஆகமநூல்	-	சிவாகம சாத்திரத்துள்
வைத்த	-	வைக்கப்பட்ட
பொருள்	-	பதி பசு பாசப்பொருள்களின் உண்மை யியல்புகளை
வழுவா	-	குற்றமற்ற
உண்மை விளக்கம்	-	உண்மை விளக்கம் என்னும் இச் செந்தமிழ் நூலால்
உரைசெய்ய	-	(யாம்) எடுத்துரைக்க
திண்	-	வலிமைமிக்க
மதம்சேர்	-	மதநீர் பொழியப்பெற்ற
அந்திநிற	-	மாலைவானம்போலும் சிவந்த நிறமுள்ள
தந்திமுக	-	யானைமுகங் கொண்ட
தொந்தி வயிற்று	-	பருத்த வயிறுடைய
ஐங்கரனை	-	ஐந்து கைகளோடு கூடிய விநாயகப்பெருமானாரை
பந்தம் அற	-	(எமது) அவிச்சை[1] கெடும்படி
புந்தியுள்	-	உள்ளத்தில்
வைப்பாம்	-	வைத்துத் தியானிப்போம்.

1 அவிச்சை - அஞ்ஞானம்

இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என வேதம் நான்கு. காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம், தீப்தம், சூக்ஷ்மம், ஸஹஸ்ரம், அம்சுமான், சுப்ர பேதம், விஜயம், நிச்வாஸம், ஸ்வாயம்புவம், அனலம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகபிம்பம், ப்ரோத்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேச்வரம், கிரணம், வாதுளம் எனச் சிவாகமம் இருபத்தெட்டு. இவை வடமொழியிலுள்ளன ; சிவபெருமனால் அருளிச் செய்யப்பட்டன.

நூல்

ஆசிரியரிடம் விண்ணப்பித்தல்

1. பொய்காட்டிப் பொய்யகற்றிப் போதானந் தப்பொருளா
மெய்காட்டு மெய்கண்டாய் விண்ணப்பம் - பொய்காட்டா
மெய்யா திருவெண்ணை வித்தகா சுத்தவினா
வையாநீ தான்கேட் டருள்.

திருவெண்ணை	- திருவெண்ணெய்நல்லூரில் எழுந்தருளியுள்ள
வித்தகா	- ஞான விநோதரே!
பொய்காட்டா	- [1]இருவினை தராத
மெய்யா	- திருவருள் வடிவாயுள்ளவரே!
பொய்	- பாசஞான பசுஞானங்களை
காட்டி	- புலப்படுத்தி
பொய்	- (அவற்றைப்) பொய்யென்று
அகற்றி	- கழிப்பித்து
(மெய்ஞ்ஞானமாகிய உம் திருவருளால்)	
மெய் போத ஆனந் தம் ஆம் பொருள்	- சச்சிதானந்தமாம் பரசிவப் பொருளை
காட்டும்	- காட்டவல்ல
மெய்கண்டாய்	- மெய்கண்ட நாதரே!
ஐயா	- ஆசாரிய மூர்த்தியே!
விண்ணப்பம்	- (அடியேன்) வேண்டுகோள் (இது)
சுத்த	- (அடியேன் உள்ளத்தைத்) தூய்மையில் நிறுத்தவல்ல
வினா	- (சில) வினாக்களை
நீ கேட்டு	- தேவரீர் திருச்செவி யேற்று

(விடைகூறி அடியேனை)

1 இருவினைதராத - கருமங்காரணம் வராத

அருள் - ஆட்கொண்டருள்வீராக.

தான், அசை

ஸ்ரீ மெய்கண்டாரிடம் முன்னமேயே அநுக்கிரகம் பெற்று ஞானவாழ்வு எய்தியவர் இந்நூலாசிரியர். ஆயினும் சீடர் வினவுவது போலும் ஆசிரியர் விடை தருவது போலும் இந்நூல் இயன்றது. நம்போல்வார் உண்மையை விளங்கிக் கொள்வதற்குப் பெரிதும் உபகரிப்பது இம்முறை. இச்செய்யுளில் ஆசிரியர் சிவமாகப் பாவிக்கப்பட்டார்.

விண்ணப்பங்கள்

2. *ஆறாறு தத்துவமே தாணவமே தன்றேதான்*
மாறா வினையேது மற்றிவற்றின் - வேறாகா
நானேது நீயேது நாதனட மஞ்செழுத்துத்
தானேது தேசிகனே சாற்று.

தேசிகனே	- ஆசாரிய மூர்த்தியே!
ஆறு ஆறு தத்துவம் ஏது	- முப்பத்தாறு தத்துவங்களின் இயல்பு யாது?
ஆணவம் எது	- ஆணவத்தின் இயல்பு யாது?
அன்றே	- தொன்றுதொட்டே
மாறா	- விலகாமல் தொடர்ந்து வருகிற
வினை ஏது	- கன்மத்தின் இயல்பு யாது?
இவற்றின்	- இம்மாயை ஆணவம் கன்மம் ஆகியவற்றிற்கு
வேறு ஆகா	- வேறாகாமல் வசப்பட்டிருக்கிற
நான் ஏது	- பசுவின் இயல்பு யாது?
நீ ஏது	- பதியின் இயல்பு யாது?
நாதன் நடம் (ஏது)	- பதியினது நிருத்தத்தின் இயல்பு யாது?
அஞ்சு எழுத்து (ஏது)	- பஞ்சாக்கரத்தின் இயல்பு யாது?
தான் ஏது	- முத்தியின் இயல்பு யாது?
	(இவ்வினாக்களுக்கு)
சாற்று	- விடையருளிச் செய்வீராக.

அன்றேதான் என்பதிலுள்ள தான், மற்று அசைகள்.
வேறாக, எழுத்துந்தான் என்றும் பாடம்.

மாயையின் காரியம் தத்துவங்கள். ஆகலின் முதல் வினா மாயையைப்பற்றி எழுந்ததென்றுங் கொள்ளலாம். நான் என்பது சீடனுக்காகிப் பசுவையும் நீ என்பது ஆசிரியனுக்காகிப் பதியையும் குறித்தன. தத்துவங்கள் (மாயை), ஆணவம், கன்மம், பசு, பதி, தாண்டவம், பஞ்சாக்கரம், முத்தி என்னும் எட்டையும் விசாரிப்பதற்கு இச்செய்யுளில் எட்டு வினாக்கள் வந்தன.

ஆசிரியர் விடையருளத் திருவுளம் பற்றல்

3. உள்ளபடி யித்தை யுரைக்கக்கே ளுன்றனக்கு
வள்ளலரு ளாலன்று வாய்மலர்ந்த-தெள்ளியசீ
ராகமங்கள் சொன்ன வடைவிலே யானந்த
யோக நிகழ்புதல்வா வுற்று.

ஆனந்தம்	–	பேரின்பத்தைத் தரக்கூடிய
யோகம்	–	யோகமார்க்கத்தில்
நிகழ்புதல்வா	–	சரிக்கிற நன்மாணாக்கனே!
வள்ளல்	–	சிவபிரான்
அருளால்	–	கருணை மேலீட்டால்
அன்று	–	சிருட்டியா ரம்பத்திலேயே
வாய்மலர்ந்த	–	ஆக்கியருளிய
தெள்ளியசீர்	–	தெளிந்த சிறந்த
ஆகமங்கள்	–	சிவாகமங்கள்
சொன்ன	–	விளக்கிய
அடைவில்	–	முறையில்
உன்றனக்கு	–	உனக்கு
இத்தை	–	விடைகளை
உள்ளபடி	–	(அவற்றில்) இருக்கிறபடி
உரைக்க	–	(யாம்) சொல்ல
உற்று	–	(நீ) புத்தியைச் சிதறவிடாமல் ஒருக்கி
கேள்	–	கேட்பாயாக.

ஏ, அசை மலர்ந்து என்றும் பாடம.

சிவாகம ஞானமொன்றே ஆன்மாக்களைக் கடைத்தேற்றும். சரியை கிரியை முற்றி யோக நெறி நிற்பவரே இவ்வினாக்களைக் கேட்டற்குரியார். அவராலேயே ஆசிரியன் கூறும் விடைகளை வாங்கிக் கொள்ள முடியும். நன்மாணாக்கன் பாடங்கேட்கு முறையும் இச்செய்யுளில் அறிவுறுத்தப்பட்டது.

பூதங்கள், அவற்றின் வடிவு

4. நாற்கோணம் பூமிபுன னண்ணுமதி யின்பாதி
யேற்குமனல் முக்கோண மெப்போது-மார்க்கு
மறுகோணங் கால்வட்ட மாகாய மான்மா
வுறுகாய மாமிவற்றா லுற்று.

எப்போதும்	- எந்தக்காலத்திலும்
பூமி	- பிருதிவி
நால் கோணம்	- நாற்கோணம் வடிவாயிருக்கும்.
புனல்	- அப்பு
பாதிமதியின் நண்ணும்	- அரைச்சந்திரன் வடிவாயிருக்கும்.
அனல்	- தேயு
முக்கோணம் ஏற்கும்	- முக்கோண வடிவாயிருக்கும்.
கால்	- வாயு
அறுகோணம் ஆர்க்கும்	- அறுகோண வடிவாயிருக்கும்.
ஆகாயம்	- ஆகாசம்
வட்டம்	- வட்டவடிவா யிருக்கும்.
ஆன்மா	- உயிர்
உறு காயம்	- அடைகிற தூலசரீரம்
இவற்றால்	- இப்பூதங்களின் பரிணாமத்தால்
உற்று	- (வினைக்கு) ஈடாகி
ஆம்	- உண்டாகும்.

பூதங்கள் ஐந்து. பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்பன அவை. அவற்றின் வடிவங்கள் முறையே நாற்கோணம், அர்த்த சந்திரன், முக்கோணம், அறுகோணம், வட்டம் ஆகும். உயிர்க்குக் கிடைத்துள்ள தூலவுடம்பு அப்பஞ்சபூத பரிணாமத்தாலானது.

பூதங்களின் நிறம், எழுத்து

5. பொன்பார் புனல்வெண்மை பொங்கு மனல்சிவப்பு
வன்கால் கருமைவளர் வான்றூம - மென்பா
ரெழுத்து லவரயவப் பாராதிக் கென்று
மழுத்தமதாய் நிற்கு மது.

பார் பொன்	-	பிருதிவி பொன்னிறம்.
புனல் வெண்மை	-	அப்பு வெண்ணிறம்.
பொங்கும் அனல் சிவப்பு	-	வளர்கின்ற தேயு செந்நிறம்.
வன் கால் கருமை	-	வலிய வாயு கருநிறம்.
வளர் வான் தூமம்	-	விரிந்த ஆகாசம் புகை நிறம்.
பார் ஆதிக்கு	-	அந்தப் பிருதிவி முதலியவற்றுக்கு
எழுத்து	-	பீஜாட்சரம் முறையே
ல வ ர ய அ	-	லகார, வகார, ரகார, யகார, ஹகாரம் ஆகும்.
அது	-	அவ்வெழுத்து (அப்பூதங்களில்)
என்றும்	-	எப்போதும்
அழுத்தமது ஆய் நிற்கும்	-	அழுந்தி நிற்கும்.
என்பார்	-	இப்படிச் சொல்வார் அறிஞர்.

அப்பூதங்களின் நிறம் முறையே பொன்மை, வெண்மை, செம்மை, கருமை, புகைமை யாகும் ; பீசாக்காரம் ல வ ர ய ஹ ஆகும். ஹ என்னும் வடவெழுத்துத் தமிழில் அ என நின்று வ் என்ற உடம்படுமெய் பெற்று வ ஆயிற்று.

பூதங்களின் அடையாளம்

6. குறிகுலிசங் கோகனதங் கொள்சுவத்தி குன்றா
வறுபுள்ளி யாரமுத விந்துப் - பிறிவின்றி
மண்புனறீக் கால்வான மன்னு மடைவேயென்
றொண்புதல்வா வாகமமோ தும்.

ஒண்புதல்வா	-	நன்மாணாக்கனே!
மண்	-	பிருதிவி
புனல்	-	அப்பு
தீ	-	தேயு
கால்	-	வாயு
வானம்	-	ஆகாசம் (என்னும் ஐம் பூதங்களிலும்)
அடைவே	-	முறையே
குலிசம்	-	வச்சிராயுதம்
கோகனதம்	-	தாமரைப்பூ
கொள்சுவத்தி	-	பொருந்திய சுவத்திகம்
குன்றா அறுபுள்ளி	-	கெடாத அறுபுள்ளி
ஆர் அமுத விந்து	-	(இனிமை) நிறைந்த அமுத பிந்து என்பன
பிறிவு இன்றி	-	நீங்குத லில்லாமல்
குறி	-	அடையாளமாக
மன்னும் என்று	-	இருக்கும் என்று
ஆகமம்	-	சிவாகமங்கள்
ஓதும்	-	சொல்லும்.

பிருதிவி முதலிய பூதங்களின் அடையாளம் முறையே வச்சிராயுதமும், தாமரைப் பூவும், சுவஸ்திகமும், அறுபுள்ளியும், அமுதபிந்துவும் ஆகும்.

சுவஸ்திகம் - இருதலை மேழி. Swastik 卐
பிந்து - துளி.

பூதங்களின் அதிதெய்வங்கள், அத்தெய்வங்களின் தொழில்கள்

7. *பாராதி யைந்துக்கும் பன்னுமதி தெய்வங்க*
ளாரா ரயனாதி யைவரா - மோரோர்
தொழிலவர்க்குச் சொல்லுங்கா றோற்றமுத லைந்தும்
பழுதறவே பண்ணுவர்காண் பார்.

பார் ஆதி	- பிருதிவி முதலிய
ஐந்துக்கும்	- பஞ்ச பூதங்களுக்கும்
பன்னும்	- (சிவாகமங்கள்) சொல்லுகிற
அதி தெய்வங்கள்	- அதிதெய்வங்களாயுள்ளவர்
ஆர் ஆர்	- யார் யார் (என்னில்)
அயன் ஆதி	- பிரமன் முதலிய
ஐவர் ஆம்	- ஐந்துபேருமாவர் (என்க).
அவர்க்கு	- அவ்வைவருக்கும் (உரிய)
ஓர் ஓர் தொழில்	- ஒவ்வொரு கிருத்தியமும்
சொல்லுங்கால்	- சொல்வதாயின்

(அவர் முறையே)

தோற்றம் முதல்	- சிருட்டி முதலிய
ஐந்தும்	- பஞ்சகிருத்தியங்களையும்
பழுது அற	- குற்றமின்றி
பண்ணுவர்	- செய்வார்.
காண்	- (இதைச்) சிந்திப்பாயாக.
பார்	- தெளிவாயாக

ஏ, அசை,

பிருதிவி முதலிய ஐம்பூதங்களுக்கும் முறையே பிரமன், விட்டுணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்பவர் அதிதெய்வங்களாகவார். அவர் செய்யுந்தொழில்கள் முறையே சிருட்டி முதலிய ஐந்துமாம். அதிதெய்வம் - நிலைக்களமாகக் கொண்டு இயக்குந் தெய்வம்.

அத்தொழில்களின் வகை

8\. *படைப்ப னயனளிப்பன் பங்கயக்கண் மாயன்*
றுடைப்ப னுருத்திரனுஞ் சொல்லின் - றிடப்பெறவே
யென்றுந் திரோபவிப்ப ரீசர் சதாசிவரு
மன்றே யனுக்கிரக ராம்.

(அத்தொழில்களை)

சொல்லில்	-	வகுத்துரைக்கில்
அயன் படைப்பன்	-	பிரமன சிருட்டிப்பான்.
பங்கயக்கண் மாயன்	-	தாமரைக் கண்ணனாகிய விட்டுணு
அளிப்பன்	-	இரட்சிப்பான்.
உருத்திரனும்	-	உருத்திரனும்
துடைப்பன்	-	சங்கரிப்பான்.

(உயிர்கள்)

திடம் பெற	-	பக்குவம் அடையும்படி
ஈசர்	-	மகேசுரர்
என்றும்	-	எப்போதும்
திரோபவிப்பர்	-	திரோபவிப்பார்.

(பக்குவம் எய்திய ஆன்மாக்களுக்கு)

அன்றே	-	எய்தியபோதே
சதாசிவரும்	-	சதாசிவரும்

(முத்திகொடுத்து)

அனுக்கிரகர் ஆம்	-	அனுக்கிரகிப்பார்
ஏ	-	அசை

திடம்பெற என்பது எதுகை நோக்கித் 'திடப்பெற' என நின்றது.

சிருட்டி - படைத்தல். இரட்சித்தல் - காத்தல், சங்கரித்தல் - அழித்தல். திரோபவித்தல் - மறைத்தல். அனுக்கிரகித்தல் - அருளல். இச்செய்யுளில் ஐந்து தொழில்களும் வகுத்துக் கூறப்பட்டன;

உயிர்களுக்கு மாயையிலிருந்து தனு கரண புவன போகங்களை ஆக்கிக்கொடுத்தல் சிருட்டி.

அவற்றை நிலைபெறுத்தல் திதி.

அவற்றை மீளவும் மாயையில் ஒடுக்குதல் சங்காரம். இம் மூன்று செயல்களும் மாயையில் நிகழும்.

உயிர்களுக்குப் பிறப்பு இறப்புக்களைக் கொடுத்து இன்பத் துன்பங்களை ஊட்டுதல் திரோபவம்.

அவற்றிற்குப் பாசத்தை நீக்கி முத்தியைக் கொடுத்தல் அனுக்கிரகம். இவ்விரு செயல்களும் உயிர்களிடம் நிகழும்.

சிருட்டி. திதி. சங்காரம், திரோபவம் என்னும் நான்கும் பந்தம் எனவும், அனுக்கிரகம் வீடு எனவும் படும்.

திதியில் திரோபவத்தையும், சங்காரத்தில் அனுக்கிரகத்தையும் அடக்கிச் சொல்வதுமுண்டு. அப்போது ஐந்தொழில் முத்தொழிலாய் முடியும்.

பூதங்களின் குணம், தொழில்

9. *மண்கடின மாய்த்தரிக்கும் வாரிகுளிர்ந் தேபதமா*
மொண்கனல்சுட் டொன்றுவிக்கு மோவாமல் - வண்கால்
பரந்துசலித் துத்திரட்டும் பார்க்கிலா காயம்
நிரந்தரமாய் நிற்கு நிறைந்து.

பார்க்கில்	-	ஆராயின்
மண்	-	பிருதிவி
கடினம் ஆய்த் தரிக்கும்	-	கடினமாகித் தாங்கும்
வாரி	-	அப்பு
குளிர்ந்து பதம் ஆம்	-	குளிர்வாகி நனைக்கும்
ஒண் கனல்	-	ஒளி பொருந்திய தேயு
சுட்டு ஒன்றுவிக்கும்	-	சூடாகி ஒன்றுபடுத்தும்
வண் கால்	-	வளமை மிக்க வாயு
ஓவாமல்	-	ஓயாமல்
பரந்து சலித்து	-	விரிந்து இயங்குவதாகி
திரட்டும்	-	குவிக்கும்
ஆகாயம்	-	ஆகாசம்
நிரந்தரம் ஆய்	-	வெளியாகி
நிறைந்து நிற்கும்	-	கலந்து நிற்கும்

ஏ, அசை

பிருதிவிக்குக் கடினமும், அப்பவுக்குக் குளிர்ச்சியும், தேயுவுக்கு வெம்மையும், வாயுவுக்குச் சலனமும், ஆகாசத்துக்கு வெளியாதலும் குணங்கள். பிருதிவிக்குப் பொருளைத் தாங்கலும், அப்புவுக்கு அதனை நனைத்தலும், தேயுவுக்கு அதனை நீறாக்கி ஒன்று படுத்தலும், வாயுவுக்கு அதனைப் பரப்பலுங் குவித்தலும், ஆகாசத்துக்கு அதனுட் சென்று கலத்தலும் தொழில்கள்.

4 முதல் 9 முடிய 6 செய்யுட்களில் ஐந்து பூதங்களும், அவற்றின் வடிவு, நிறம், அக்கரம், அடையாளம், அதிதேவர், அவர் தொழில், அப்பூதங்களின் குணம், தொழில் என்பன சொல்லப்பட்டன.

தன்மாத்திரைகள்

10. உள்ளபடி மாபூத மோதினோ முன்றனக்குக்
கள்ளமிகு மைம்புலனுங் கட்டுரைக்கின் - மெள்ளவே
யோசை பரிச முருவஞ் சுவைநாற்ற
மாசைதரு மைம்புலனே யாம்.

(நன் மாணாக்கனே!)

உன்றனக்கு - உனக்கு

மெள்ள - சாவதானமாக

உள்ளபடி - (சிவாகமங்களிற்) சொல்லப்பட்டவாறு

மாபூதம் - தூல பூதங்கள்

(அவை பற்றிய பிற செய்திகள் ஆகியவற்றை யாம்)

ஓதினோம் - விளக்கினோம்.

(இனி, அப் பூதங்களுக்கு உபாதானமாய்)

கள்ளம் மிகும் - சூக்குமித்துள்ள

ஐம்புலனும் - ஐந்து தன்மாத்திரைகளும் (இவையென)

கட்டுரைக்கில் - எடுத்துச் சொல்வதாயின்

ஆசை தரும் - ஊக்கத்தைச் செய்விக்கிற

ஓசை - சப்தம்

பரிசம் - ஸ்பரிசம்

உருவம் - ரூபம்

சுவை - ரஸம்

நாற்றம் - கந்தம் (என்பன அந்த)

ஐம்புலன் ஆம் - ஐந்து தன்மாத்திரைகளாகும்.

ஏ, ஏ அசைகள்.

ஈண்டுத் தன்மாத்திரையே இயைபு நோக்கிப் புலனெனப்பட்டது. தன்மாத்திரைகள் ஐந்து. சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம் என்பன அவை. அவை சூக்கும் பூதங்கள். அவற்றிலிருந்து காரியப்பட்டன ஆகாச முதலிய தூல பூதங்கள். தன்மாத்திரைகளுள் சத்த மாத்திரையாய் நிற்பது சத்தம். சத்தத்தை உள்ளடக்கிப் பரிச மாத்திரையாய் நிற்பது பரிசம். சத்தத்தையும் பரிசத்தையும் உள்ளடக்கி உருவ மாத்திரையாய் நிற்பது உருவம். சத்தத்தையும் பரிசத்தையும் உருவத்தையும் உள்ளடக்கி இரச மாத்திரையாய் நிற்பது இரசம். சத்தத்தையும் பரிசத்தையும் உருவத்தையும் இரசத்தையும் உள்ளடக்கிக் கந்த மாத்திரையாய் நிற்பது கந்தம். ஆகலின் சத்தத்தின் காரியமாகிய ஆகாசத்திலிருப்பது சத்தமாகிய *ஒரு குணம். பரிசத்தின் காரியமாகிய வாயுவிலிருப்பது சத்தமும் பரிசமுமாகிய *இரு குணம். உருவத்தின் காரியமாகிய தேயுவிலிருப்பது சத்தமும் பரிசமும் உருவமுமாகிய *முக்குணம். இரசத்தின் காரியமாகிய அப்புவிலிருப்பது சத்தமும் பரிசமும் உருவமும் இரசமுமாகிய *நாற்குணம். கந்தத்தின் காரியமாகிய பிருதிவியிலிருப்பது சத்தமும் பரிசமும் உருவமும் இரசமும் கந்தமுமாகிய *ஐங்குணம். தன் மாத்திரைகளுக்கும் புலன்களுக்கும் பெயர் ஒன்றே. ஆயினும் அவை தம்முள் சிறிது வேற்றுமையுண்டு. இத்தன் மாத்திரைகள் தாமதாங்காரத்தில் தோன்றின.

---

* பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி.

(திருவாசகம் போற்றித் திருவகவல்)

மின்னுருவை விண்ணகத்தி லொன்றாய் மிக்கு
வீசுங்கால் தன்னகத்தில் இரண்டாய்ச் செந்தீத்
தன்னுருவின் மூன்றாய்த்தாழ் புனலின் நான்காய்த்
தரணிதலத் தஞ்சாகி ....

(அப்பரடிகள் 6-ம் திருமுறை)

இவை 10-வது செய்யுளில் விளக்கிய கருத்துப்பற்றியே என்பது உணரத்தக்கது.

11. ஞானேந் திரியங்க ணன்றா வுரைக்கக்கே
ளூன மிகுபூத முற்றிடமா - யீனமாஞ்
சத்தாதி யையறியுந் தானஞ் செவிதோல்கண்
ணத்தாலு மூக்கென் றறி.

ஞானேந்திரியங்கள்	-	ஞான இந்திரியங்கள்
		(இவ்வியல்பின என்பதை)
நன்றுஆ	-	விளக்கமாக
உரைக்க	-	(யாம்) சொல்ல
கேள்	-	(நீ) கேட்பாயாக.
		(அவ்விந்திரியங்கள்)
ஊனம் மிகு	-	தாமத குணம் மிகுந்த
பூதம்	-	தன்மாத்திரைகளை
உற்ற இடம் ஆ	-	பொருந்திய இடமாகக் கொண்டு
ஈனம் ஆம்	-	கீழ்த்தரமான
சத்த ஆதியை	-	சத்த முதலிய ஐந்து விடயங்களையும்
அறியும்	-	அறிந்துவரும்
		(அவை நிற்றற்குரிய)
தானம்	-	இடங்கள்
செவி தோல் கண்	-	செவியும் தோலும் கண்ணும்
அம்தாலு மூக்கு என்று	-	அழகிய நாக்கும் மூக்கும் ஆம் என்று
அறி	-	அறிவாயாக

உற்ற இடம். பெயரெச்சத்து ஈறு திரிந்து உற்றிடமென நின்றது. அந் தாலு எதுகை நோக்கி அத்தாலுவாயிற்று.

சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்தம் என்பன ஈண்டுப் புலன்கள், புலனும் விடயமும் ஒன்று.

செவி, தோல், கண், நாக்கு, மூக்கு என ஞானேந்திரியங்கள் ஐந்து. அவை வடமொழியில் முறையே சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, கிராணம் எனப்படும். இவை சாத்துவிகாங்காரத்தில் தோன்றின.

செவி, தோல், கண் அறியும் விதம்

12. வானிடமா நின்றுசெவி மன்னு மொலியதனை
யீனமிகுந் தோல்கா லிடமாக -வூனப்
பரிசந் தனையறியும் பார்வையிற்கண் ணங்கி
விரவியுரு வங்காணு மே.

செவி	-	சோத்திரம் என்னும் இந்திரியம்
வான் இடம் ஆ நின்று	-	சத்த தன்மாத்திரையினிடமாக நின்று

(செவியாகிய உறுப்பின் வாயிலாய்)

ஒலியதனை	-	சத்தமாகிய விடயத்தை
மன்னும்	-	அறிந்துவரும்
ஈனம் மிகும்	-	இழிவு மிகுந்த
தோல்	-	துவக்கு என்னும் இந்திரியம்
கால் இடம் ஆக	-	பரிச தன்மாத்திரையினிடமாக (நின்று)

(தோலாகிய உறுப்பின் வாயிலாய்)

ஊனப் பரிசந்தனை	-	குற்றமுள்ள பரிசமாகிய விடயத்தை
அறியும்	-	அறிந்துவரும்
பார்வை	-	சட்சு என்னும் இந்திரியம்
அங்கியின்கண் விரவி	-	உருவ தன்மாத்திரையினிடமாக நின்று

(கண்ணாகிய உறுப்பின் வாயிலாய்)

உருவம்	-	உருவமாகிய விடயத்தை
காணும்	-	அறிந்துவரும்

பார்வையின் கண் அங்கி என்பதில் பர்வை அங்கியின் கண் என உருபைப் பிரித்துக் கூட்டுக.

ஏ, அசை.

ஈனம், ஊனம், என்பன தோல், பரிசம் என்பவற்றின் இழிவு தோன்ற நின்றன.

இச்செய்யுளிலும் அடுத்த செய்யுளிலும் வரும் பூதப் பெயர் தன்மாத்திரைக்காயிற்று.

சோத்திரம் ஓரிந்திரியம். அதற்கு மதுகையைத் தருவது சத்த தன்மாத்திரை. அவ் விந்திரியம அத் தன்மாத்திரையைப் பற்றிக் காது என்னும் உறுப்பில் நின்று சத்தம் என்னும் விடயத்தை அறிந்து வரும்.

துவக்கு ஓரிந்திரியம். அதற்கு மதுகையைத் தருவது பரிச தன்மாத்திரை. அவ் விந்திரியம் அத் தன்மாத்திரையைப் பற்றித் தோல் என்னும் உறுப்பில் நின்று பரிசம் என்னும் விடயத்தை அறிந்துவரும்.

சட்சு ஓரிந்திரியம். அதற்கு மதுகையைத் தருவது உருவ தன்மாத்திரை. அவ்விந்திரியம் அத் தன்மாத்திரையைப் பற்றிக் கண் என்னும் உறுப்பில் நின்று உருவம் என்னும் விடயத்தை அறிந்துவரும்.

நாக்கு, மூக்கு அறியும் விதம்

13. *நன்றாக நீரிடமா நாவிரதந் தானறியும்*
பொன்றா மணமூக்குப் பூவிடமா - நின்றறியு
மென்றோது மன்றே யிறையா கமமிதனை
வென்றார்சென் றாரின்ப வீடு.

நா	-	சிங்குவை என்னும் இந்திரியம்
நீர் இடம் ஆ	-	இரச தன்மாத்திரையி னிடமாக நின்று

(நாக்காகிய உறுப்பின் வாயிலாய்)

இரதம்	-	இரசமாகிய விடயத்தை
நன்றாக	-	செவ்வையாக
அறியும்	-	அறிந்துவரும்
மூக்கு	-	கிராணம் என்னும் இந்திரியம்
பூ இடம் ஆ நின்று	-	கந்த தன்மாத்திரையினிடமாக நின்று

(மூக்காகிய உறுப்பின் வாயிலாய்)

பொன்றா	-	கெடாத
மணம்	-	கந்தமாகிய விடயத்தை
அறியும்	-	அறிந்து வரும்
என்று	-	இவ்வாறு
இறை ஆகமம்	-	சிவாகமங்கள்
ஓதும்	-	சொல்லும்
இதனை	-	இவ் விந்திரியங்களை

(விடயங்களிற் பிரவேசியாதபடி திருவருளே துணையாக)

வென்றார்	-	அடக்கிய ஞானவீரரே (தப்பாமல்)
இன்ப வீடு	-	பேரின்ப வீட்டில்
சென்றார்	-	சென்றாராவர்

தான், அன்று, ஏ அசைகள்.

சிங்குவை ஒ ரிந்திரியம். அதற்கு மதுகையைத் தருவது இரச தன்மாத்திரை. அவ்விந்திரியம் அத் தன்மாத்திரையைப் பற்றி நாக்கு என்னும் உறுப்பில் நின்று இரசம் என்னும் விடயத்தை அறிந்து வரும்.

கிராணம் ஒ ரிந்திரியம். அதற்கு மதுகையைத் தருவது கந்த தன்மாத்திரை. அவ் விந்திரியம் அத் தன்மாத்திரையைப் பற்றி மூக்கு என்னும் உறுப்பில் நின்று கந்தம் என்னும் விடயத்தை அறிந்து வரும்.

இந்திரியம் தேரோட்டி. தன்மாத்திரை தேர். உறுப்புத் தேரோடு நிலம். தேரோட்டிக்குத் தேரும் நிலமும் இடமாதல் போல இந்திரியங்கள் விடயங்களை யறிதற்குத் தன்மாத்திரைகளும் உறுப்புக்களும் நிலைக்களமாகும். இவ் விந்திரியங்களை நிக்கிரகித்த தீரரே முத்தியெய்துவார். இஞ் ஞானேந்திரியங்கள் சாத்து விகாங்காரத்தில் தோன்றின.

கன்மேந்திரியங்கள்

14. கண்ணுதனூ லோதியிடுங் கன்மேந் திரியங்க
ளெண்ணும்வச னாதிக் கிடமாக - நண்ணியிடும்
வாக்குப்பா தம்பாணி மன்னு குதமுபத்த
மாக்கருது நாளு மது.

கண் நுதல் நூல்	-	சிவாகமங்கள்
ஓதியிடும்	-	சொல்லியுள்ள
கன்மேந்திரியங்கள்	-	கன்ம இந்திரியங்கள்
எண்ணும்	-	(ஐந்து எனக்) கணக்கிடப்பட்ட
வசன ஆதிக்கு	-	வசனம் முதலியவற்றுக்கு
இடம் ஆக	-	இடங்களாக
நண்ணியிடும்	-	பொருந்தும்
அது	-	அவ்விடங்களை
வாக்கு	-	வாக்கும்
பாதம்	-	பாதமும்
பாணி	-	பாணியும்

மன்னு - (அவற்றுடன்) சேர்ந்த

குதம் - பாயுருவும்

உபத்தம் ஆ - உபத்தமும் என

நாளும் - எப்போதும்

கருது - தெரிவாயாக.

வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் எனக் கன்மேந்திரியங்கள் ஐந்து. இவை இராசதாங்காரத்தில் தோன்றின.

வசனாதிகளை அடுத்த செய்யுளிற் காண்க.

கன்மேந்திரியங்கள் தொழில் செய்யும் விதம்

15. *வாக்காகா யம்மிடமா வந்துவச னிக்குங்கால்*
போக்காருங் காற்றிடமாப் புல்கியன - லேற்கு
மிடுங்கை குதநீ ரிடமா மலாதி
விடும்பா ரிடமுபத்தம் விந்து.

வாக்கு - வாக்கு என்னும் இந்திரியம்

ஆகாயம் இடம் ஆவந்து - சத்த தன்மாத்திரையினிடமாக வந்து

(வாயாகிய உறுப்பின் வாயிலாய்)

வசனிக்கும் - பேசும்

கால் - பாதம் என்னும் இந்திரியம்

காற்று இடம் ஆ - பரிச தன்மாத்திரையினிடமாக வந்து

(பாதமாகிய உறுப்பின் வாயிலாய்)

போக்கு ஆரும் - போக்கு (வரவு) செய்யும்

கை - பாணி என்னும் இந்திரியம்

அனல் புல்கி - உருவ தன்மாத்திரையினிடமாக வந்து

(கையாகிய உறுப்பின் வாயிலாய்)

ஏற்கும் இடும் - ஏற்றல் இடுதல் செய்யும்

குதம் - பாயுரு என்னும் இந்திரியம்

நீர் இடம் ஆ - இரச தன்மாத்திரையினிடமாக வந்து

(குதமாகிய உறுப்பின் வாயிலாய்)

மல ஆதி விடும்	-	மல முதலியன வெளிப்படுத்தும்.
உபத்தம்	-	உபத்தம் என்னும் இந்திரியம்
பார் இடம்	-	கந்த தன்மாத்திரையினிடமாக வந்து

(உபத்தம் என்னும் உறுப்பின் வாயிலாய்)

விந்து	-	சுக்கில சோணிதங்களை
(விடும்)	-	வெளிப்படுத்தும்

வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம் என்பன வசனாதி. அவை முறையே பேச்சு, போக்கு வரவு, இடுதல் ஏற்றல், மலசலங் கழித்தல், சுக்கில சோணித வெளிப்பாடு எனத் தமிழிற் கூறப்படும். வாக்குப் (வாய்) பேசும். பாதம் (கால்) போக்கு வரவு செய்யும். பாணி (கை) இடுதல் ஏற்றல் செய்யும். பாயுரு (மலத் துவாரம்) மலசலங் கழிக்கும். உபத்தம் (ஆண் பெண் குறிகள்) சுக்கில சோணிதங்களை வெளியிடும்.

வாக்கு ஓரிந்திரியம். அதற்கு மதுகையைத் தருவது சத்த தன்மாத்திரை. அவ்விந்திரியம் அத் தன்மாத்திரையைப் பற்றி வாக்கு என்னும் உறுப்பில் நின்று பேசுதல் என்னும் தொழிலைச் செய்யும். இப்படியே பிற இந்திரியங்களையும் சொல்லிக் காண்க.

அந்தக்கரணங்கள்

16. *அந்தக் கரண மடைவே யுரைக்கக்கே*
ளந்தமனம் புத்தியுட னாங்காரஞ் - சிந்தையிவை
பற்றியது நிச்சயித்துப் பல்கா லெழுந்திருந்தங்
குற்றதுசிந் திக்கு முணர்.

அந்தக்கரணம்	-	அந்தக்கரணங்களை
அடைவே	-	வரிசையாக
உரைக்க	-	(யாம்) சொல்ல
கேள்	-	(நீ) கேட்பாயாக.
இவை	-	இவ் வந்தக்கரணங்கள்

(நிருவிகற்பக் காட்சியின்)

அந்தம்	-	முடிவில்

(சேட்டிக்கிற)

மனம்	-	மனமும்
புத்தியுடன்	-	புத்தியுடன்
ஆங்காரம்	-	ஆங்காரமும்
சிந்தை	-	சித்தமும் (ஆம்)
அது	-	அவை
		(முறையே)
பற்றி	-	பற்றியும்
நிச்சயித்து	-	நிச்சயித்தும்
பல்கால்	-	அடிக்கடி
எழுந்திருந்து	-	ஒருப்பட்டெழுந்தும்
அங்கு உற்றது	-	அங்ஙனம் அறியப்பட்டதை
சிந்திக்கும்	-	சிந்திக்கும் (என)
உணர்	-	அறிவாயாக.

மனம், புத்தி, ஆங்காரம், சித்தம் என அந்தக்கரணங்கள் *நான்கு. மனம் பற்றும். புத்தி நிச்சயிக்கும். ஆங்காரம் ஒருப்பட்டெழும். சித்தம் சிந்திக்கும் அதாவது நினைக்கும்.

---

* அந்தக்கரணம் மூன்றெனக் கொண்டு குணதத்துவத்தை மூலப் பகுதியின் வேறு வைத்தெண்ணி மூலப் பகுதிக்குக் கீழ்த் தத்துவம் இருபத்து நான்கெனத் தொகை கொள்ளுவாரும், குணதத்துவத்தை மூலப் பகுதியுளடக்கி, உபகரித்தற் சிறப்புப் பற்றிச் சித்தத்தை மனத்தின் வேறு வைத்தெண்ணி அந்தக்கரணம் நான்கெனக்கொண்டு மூலப்பகுதிக்குக் கீழ்த்தத்துவம் இருபத்து நான்கெனத் தொகை கொள்வாரும், சித்தமும் மனமும் ஒன்றாக வைத்து, மூலப்பகுதியையுங் குண தத்துவத்தையும் ஒன்றாக வைத்தெண்ணி இருபத்து நாலாந்துத்துவம் மூலப்பகுதியெனத் தொகை கொள்ளுவாறுமெனப் பலதிறத்தர் ஆசிரியர். அவையெல்லாம் பொருளால் வேறுபாடின்மையின் தம்முண் முரணாமை யறிக. இஃதறியாதார் அந்தக்கரணம் மூன்றெனக் கொண்டு சித்தமென்ப தொன்றில்லை யென்பர்.

(சிவஞானபாடியம், கழகம் முதற்பதிப்பு, பக்கம் 212)

ஆன்ம தத்துவங்களைத் தொகுத்துக் கூறி வித்தியா தத்துவங்களைச் சொல்வா மென்றல்

17. ஓதியிடு நாலாறு முற்றான்ம தத்துவமென்
றாதி யருணூ லறையுங்காண் - டீதறவே
வித்தியா தத்துவங்க டம்மை விளம்பக்கே
ளுத்தமனே நன்றா வுனக்கு.

உத்தமனே - நன் மாணாக்கனே!

(யாம் இதுவரை)

ஓதியிடு - சொன்ன

நால் ஆறும் - இருபத்து நான்கும்

உற்று - கூடி

ஆன்ம தத்துவம் என்று - ஆன்ம தத்துவங்கள் என்று

ஆதி அருள் நூல் - சிவாகமங்கள்

அறையும் - சொல்லும்

(இனி)

உனக்கு - உனக்கு

தீது அற - மயக்கம் நீங்க

நன்று ஆ - மிக்க விளக்கமாக

வித்தியா தத்துவங்கள் தம்மை - வித்தியா தத்துவங்களை

விளம்ப - (யாம்) சொல்ல

கேள் - (நீ) கேட்பாயாக

காண், ஏ அசைகள்.

பூதம் 5. தன்மாத்திரை 5. ஞானேந்திரியம் 5. கன்மேந்திரியம் 5. அந்தக்கரணம் 4. ஆகத் தத்துவங்கள் 24. அவை ஆன்ம தத்துவங்கள். இனி வித்தியா தத்துவங்கள் கூறப்படும். அவை 7.

வித்தியா தத்துவங்கள்

18. கால நியதி கருதுங் கலைவித்தை
யேலவரா கம்புருட னேமாயை - மாலறவே
சொன்னோ மடைவாகச் சொன்னவிவை தன்னுண்மை
யுன்னி யுரைக்குநா முற்று.

ஏல - (சிவாகமங்களுக்கு) இசைய

கருதும் - ஆராய்ந்து கொள்ளத்தக்க

காலம் - காலமும்

நியதி - நியதியும்

கலை - கலையும்

வித்தை - வித்தையும்

அராகம் - அராகமும்

புருடன் - புருடனும்

மாயை - மாயையும்

(வித்தியா தத்துவங்களென்று)

மால் அற - மயக்கம் நீங்க

அடைவு ஆக - வரிசையாக

சொன்னோம் - கூறினோம்.

(இனி உத்தேசம்)

சொன்ன - சொல்லப்பட்ட

இவை - இத் தத்துவங்களின்

தன் உண்மை - இலக்கணத்தை

நாம் - யாம்

(உனக்கு விளக்கு முறையை)

உன்னி - சிந்தித்து

உற்று - (அதனைக்) கடைப்பிடித்து

உரைக்கும் - சொல்லுவோம்

ஏ, ஏ அசைகள்

உத்தேசம் - பெயர்

காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், * மாயை என்பன அத் தத்துவங்களின் பெயர். இனி அவற்றின் இலக்கணம் சொல்லப்படும்.

---

* அசுத்த மாயையில் அநந்ததேவர் சத்திகலக்கக் கலக் குண்ட பாகமே மாயா தத்துவமென வித்தியா தத்துவங்கள் ஏழனுள் ஒன்றாக வைத் தெண்ணப்படும்.

(சிவஞானபாடியம் 2, சூ. 2, அதி. பக். 166)

வித்தியா தத்துவங்களின் தொழில்

19. எல்லை பலம்புதுமை யெப்போது நிச்சயித்த
லல்ல றருங்கிரியை யான்மாவுக் - கொல்லை
யறிவாசை யைம்புலனு மாரவருங் காலங்
குறியா மயக்கென்று கொள்.

ஆன்மாவுக்கு - உயிர்களுக்கு

(காலம் தொழிலின்)

எல்லை - முடிவையும்

பலம் - நிகழ்வையும்

புதுமை - எதிர்வையும்

(நியதி)

எப்போதும் - எப்போதும்

(வினைப்பயன் வினைமுதலையே சாருமாறு)

நிச்சயித்தல் - நியமித்தலையும்

(கலை)

அல்லல் தரும் - துன்பந் தருவதற்கு ஏதுவாகிய

(உயிரின்)

கிரியை - கிரியாசத்தியை

(சிறிதே எழுப்புதலையும், வித்தை)

ஒல்லை - விரைந்து

அறிவு - ஞான சத்தியை

(சிறிதே எழுப்புதலையும், அராகம்)

ஆசை - இச்சாசத்தியை

(சிறிதே எழுப்புதலையும் செய்யப், புருடன் என்பது அவ்வுயிர் அவற்றோடு கூடி)

ஐம்புலனும் - ஐந்து விடயங்களையும்

ஆர வரும் - நுகர்தற்கு விரும்பும்

காலம் - பருவத்தை

குறி ஆம் - குறிப்பது ஆகும்.

(மாயை)

மயக்கு என்று - மயக்குதலை (ச் செய்யும்) என்று

கொள் - தெரிவாயாக.

உயிருக்கு வினைப் போகத்தை இத்துணைப் பொழுதென வரையறுப்பது காலம்.

ஈட்டப்பட்ட வினையின் பயனை ஈட்டிய உயிரே நுகருமாறு அரசனாணை போல நியமிப்பது நியதி.

போக நுகர்ச்சியின் பொருட்டு மல சத்தியைச் சிறிதே நீக்கி உயிரின் கிரியா சத்தியை அவ்வளவில் விளக்குவது கலை.

அதனால் வினை முதற்றன்மை யெய்திய உயிர்க்கு அவ்வளவில் ஞான சத்தியை விளக்கித் தன் வேதனைக் காட்சி யறிவிற்கும். நிருவி கற்பக்காட்சி யறிவிற்கும், சங்கற்பம் நிச்சயம் அபிமானம் என்பவற்றை யறியும் அறிவிற்கும் கருவியாய் நிற்பது வித்தை.

உயிரின் இச்சாசத்தியை அங்ஙனம் விளக்கிப் புத்தி குணங்களின் அவைராக்கிய மெனப்படும் அராக நிகழ்ச்சிக்கு ஏதுவாய் நிற்பது அராகம்.

அவ் வைந்து தத்துவங்களுடன் கூடிப் பஞ்சகஞ்சுகனாய்ப் போத்திருத்துவம் எய்தி நின்ற உயிர் பும்ஸ்துவமல முடையானாய் நிற்றல் புருடன்.

மயக்குவதாகிய காரியமாயை மாயை. இவை அத்தத்துவங்களின் தொழில். அல்லலாவது சகலத்துன்பம்.

சிவ தத்துவங்கள்

20. *வித்தியா தத்துவங்க ளேழும் விளம்பினோஞ்*
சுத்தமாந் தத்துவங்கள் சொல்லக்கே - ணித்தமாஞ்
சுத்தவித்தை யீசுரம்பின் சொல்லுஞ் சதாசிவநற்
சத்திசிவங் காணவைக டான்.

(யாம்)

வித்தியா தத்துவங்கள்	-	வித்தியா தத்துவங்கள்
ஏழும்	-	ஏழினையும்
விளம்பினோம்	-	விளக்கிச் சொன்னோம் ;

(இனி)

சுத்த ஆம் தத்துவங்கள்	-	சுத்த தத்துவங்கள்
சொல்ல	-	சொல்ல
கேள்	-	(நீ) கேட்பாயாக
அவைகள்	-	அத் தத்துவங்கள்
நித்தம் ஆம்	-	நித்தமாகிய

சுத்த வித்தை - சுத்த வித்தையும்
ஈசுரம் - ஈசுரமும்
(அவற்றின்)
பின் சொல்லும் - மேலாகச் சொல்லப்படும்
சதாசிவம் - சதாசிவமும்
நல் சத்தி - நல்ல சத்தியும்
சிவம் - சிவமும்
(என)
காண் - அறிவாயாக
தான், அசை

சுத்த தத்துவங்களே சிவதத்துவங்கள். அவை சத்த வித்தை, ஈசுரம், சதாசிவம், சத்தி, சிவம் என ஐந்து.

சுத்த தத்துவங்களின் நிலை

21. *சுத்தவித்தை ஞானமிகுந் தொன்மையா மீசுரந்தா*
னத்தன் றொழிலதிக மாக்கியிடு - மொத்தலிவை
சாதாக் கியமென்றுஞ் சத்தி சிவங்கிரியை
யாதார ஞானவுரு வாம்.

அத்தன் - சிவனுடைய
(ஞானம் கிரியைகளுள்)
ஞானம் மிகும் - ஞானம் ஏறியதாயிருக்கும்
சுத்த வித்தை - சுத்த வித்தியா தத்துவம்
தொழில் - கிரியை
அதிகம் ஆக்கியிடும் - ஏறியதாயிருக்கும்
தொன்மை ஆம் - பழமையாகிய
ஈசுரம் - ஈசுர தத்துவம்
ஒத்த இவை - ஒத்தனவாகிய இஞ்ஞானங்கிரியைகளாய்
(இருப்பது)
சாதாக்கியம் - சதாசிவ தத்துவம்
என்றும் - எப்போதும்
கிரியை - கிரியையேயாய்
(இருப்பது)

சத்தி	-	சத்தி தத்துவம்
ஞான உரு	-	ஞான வடிவாயே (இருப்பது)
சிவம்	-	சிவதத்துவம்

(சிவ கிருத்தியங்களுக்கு இத் தத்துவங்கள்)

ஆதாரம் ஆம்	-	அதிட்டானம் ஆகும்.
தான், அசை		

சிவசத்தி மூவகைப்பட்டு விளங்கும். அவை இச்சை, ஞானம், கிரியை என்பன. இச்சை என்றும் ஒரே நிலையிலுள்ளது. ஞானக்கிரியா வியாபாரத்திற்றான் தார தம்மியமுண்டு. கிரியை குறைந்து ஞானம் ஏறிய நிலை, ஞனாங் குறைந்து கிரியை ஏறிய நிலை, ஞானமுங் கிரியையும் ஒத்த நிலை, கிரியையே ஆனநிலை, ஞானமே ஆனநிலை, என்பன அது. அவை முறையே சுத்த வித்தை, ஈசுரம், சதாசிவம், சத்தி, சிவம் என்பன. அவற்றிற்கு அதிட்டானம் சுத்த தத்துவங்கள். அதனால் அவையும் சுத்தவித்தை முதலியவாகச் சொல்லப்படும்.

வியாபாரம் - தொழில். அதிட்டானம் - நிலைக்களமாகக் கொள்ளுதல்.

ஆணவம், கன்மம்

22. ஆறாறு தத்துவமுஞ் சொன்னோ மடைவாக
மாறா மலமிரண்டும் வாசொல்லக் - கூறி
லறியாமை யாணவநீ யானசுக துக்கங்
குறியா வினையென்று கொள்.

ஆறு ஆறு தத்துவமும்	-	முப்பத்தாறு தத்துவங்களையும்
சொன்னோம்	-	எடுத்துரைத்தோம்
அடைவாக	-	அடுத்தபடியாக
மாறா	-	நீங்காத (ஆணவம் கன்மம் என்கிற)
மலம் இரண்டும்	-	மலங்கள் இரண்டையும்
சொல்ல	-	(யாம்) சொல்ல
வா	-	(நீ கேட்க) வருவாயாக
குறியா கூறில்	-	விவரித்துச் சொல்வதாயின் (உன்னிற் பிரித்தறிய முடியாத விதத்தில்)

(நீ ஆன) - நீயேயான

அறியாமை - அறியாமையை

(செய்வது)

ஆணவம் - ஆணவ மலமாகும்

(அதே விதத்தில்)

நீ ஆன - நீயே யான

சுக துக்கம் - இன்ப துன்பங்களை

(கொடுப்பது)

வினை என்று - கன்ம மலமாகும் என்று

கொள் - அறிவாயாக.

உயிருக்கு அறியாமையைச் செய்வது ஆணவ மலம்; சுக துக்கத்தைக் கொடுப்பது கன்ம மலம்.

மேலும் அறிய வேட்டல்

23. *ஆறாறு தத்துவமு மாணவமும் வல்வினையு*
மாறா வருளால் வகுத்துரைத்தீர் - வேறாக
வென்னை யெனக்கறியக் காட்டி ரிவைகண்டே
னுன்னரிய தேசிகரே யுற்று

உன் அரிய - நினைத்தற்கு அரிய

(ஞானவானாகிய)

தேசிகரே - ஆசாரிய மூர்த்தியே!

(அடியேனை விட்டு)

மாறா - விலகாத

அருளால் - (உமது) திருவருளால்

ஆறு ஆறு தத்துவமும் - முப்பத்தாறு தத்துவங்களையும்

ஆணவமும் - ஆணவ மலத்தையும்

வல்வினையும் - வலிய கன்ம மலத்தையும்

வகுத்து உரைத்தீர் - வகைப்படுத்தி விளக்கினீர்

(அடியேனும்)

இவை - இவற்றை

உற்று - (உமது திருவடி) பற்றி

கண்டேன் - (தெளிவாகக்) கண்டேன்

(இனி, அப்பந்தங்களிற் பட்டுக்கிடக்கிற)

என்னை	-	அடியேனியல்பை
வேறு ஆக	-	(அவற்றின்) வேறென்று
எனக்கு	-	அடியேனுக்கு
அறிய	-	அறிவில் விளங்கும்படி
காட்டீர்	-	உணர்த்தியருள்வீராக

அடியேனியல்பாவது உயிரில்பு

இதில் நாலாவது வினா ஞாபகப்படுத்தப்பட்டது.

உயிரியல்

24. நன்றா வுரைக்கக்கே ணல்லசித்தின் முன்னசித்திங்
கொன்றாது சித்தசித்தை யோராது - நின்றிவற்றை
யன்றே பகுத்தறிவ தான்மாவே யென்றுமறை
குன்றாம லோதுங் குறித்து.

(நன் மாணாக்கனே! உயிரி னியல்பை)

இங்கு	-	இப்போது
நன்று ஆ	-	தெளிவாக
உரைக்க	-	(யாம்) சொல்ல
கேள்	-	(நீ) கேட்பாயாக
நல்ல	-	தூய
சித்தின் முன்	-	சைதன்யமாகிய சிவத்தின் முன்னர்
அசித்து	-	அசேதனங்களாகிய மாயா காரியம்
ஒன்றாது	-	விளங்கித் தோன்றாது
சித்து	-	அச்சிவம்
அசித்தை	-	அவ்வசேதனங்களை
ஓராது	-	சுட்டியறியாது
அன்றே	-	அநாதியே
இவற்றை	-	இவ் வசேதனங்களில்
நின்று	-	பொருந்தி நின்று

(பின் ஆசானருளால் இவற்றை)

பகுத்து அறிவது	-	ஒன்றொன்றா யறிதற்கு

(உரிமையுடையது இவையும் சிவமும் அல்லாத)

ஆன்மாவே என்று	- உயிரே யென்று
மறை	- வேதாகமங்கள்
குன்றாமல்	- குறைவின்றி
குறித்து ஓதும்	- விளக்கிச் சொல்லும்

சைதன்யம் அறிவுப்பொருள் அசேதனம் அறிவில்லாத பொருள், மாயாகாரியம் தனு கரண புவன போகங்கள்.

அசேதனங்களாவன அத்தனு முதலியன. அவை சூரியன் முன் தீபம் போன்று விளங்கித் தோன்றா. ஆகலின் சூரியன் போன்ற சிவம் அவற்றைச் சுட்டியறியாது. அக்காரியங்களோடு கூடி அவையோய் நிற்பது உயிர். அதற்கு ஆசானருள் கூட வேண்டும். அப்போது அது தன்னை அவற்றுக்கு வேறா யறியும். அது முன் சுட்டி யறிந்ததனாற் சிவமு மன்று. ஆகலின் அவ் வசேதனங்களுக்கும் சிவத்துக்கும் வேறா யுள்ள பொருள் உயிர் என்பது.

அசித்தாவது தத்துவப் பிரபஞ்சம். அதற்கே அறிவுண் டென்பர் சிலர். மற்றைப் பாசப் பொருள்கட்கு அஃதில்லை யென்பது சர்வாங்கீகாரம்.

தத்துவங்கள் தம்மை அறியா

25. தத்துவங்க ளாறாறுந் தம்மைத்தா மென்றறியா
வெத்தன்மை யென்னி லியம்பக்கேள் - சுத்தமா
மாறு சுவையு மறியாது தன்னைத்தான்
கூறி லவையிவைபோற் கொள்.

தத்துவங்கள்	- தத்துவங்கள்
ஆறு ஆறும்	- முப்பத்தாறும்
தம்மை	- தம்மை
தாம் என்று	- 'யான் கண்', 'யான் மனம்' என்று
அறியா	- அறியமாட்டா.
	(அஃது)
எத்தன்மை என்னில்	- எதுபோலும் என்றால்
இயம்ப	- (யாம்) சொல்ல
கேள்	- (நீ) கேட்பாயாக
கூறில்	- சொல்வதாயின்
சுத்தம் ஆம்	- சுத்தமான
ஆறு சுவையும்	- ஆறு சுவையும் (தனித்தனி)

தன்னை	-	தன்னை
தான் (என்று)	-	'யான் இனிப்பு', 'யான் புளிப்பு' என்று
அறியாது	-	அறியமாட்டாது
இவைபோல்	-	இச்சுவைகள் போன்று
அவை	-	அத் தத்துவங்களும் (ஆம் என)
கொள்	-	அறிவாயாக

இனிப்பு, கைப்பு, உவர்ப்பு, புளிப்பு, துவர்ப்பு, கார்ப்பு எனச் சுவைகள் ஆறு. எந்தச் சுவையும் தான் இன்ன சுவையென் றறியாது. அதுபோல் எந்தத் தத்துவமும் யான் இன்ன தத்துவம். இது செய்கிறேன் எனத் தன்னைப் பற்றி ஏதும் அறியாது. ஆகலின் தத்துவங்களெல்லாம் அசேதனமே யென்க.

தத்துவங்களை அறிவது உயிர்

26. ஆறு சுவையு மருந்தி யவைதம்மை
வேறொருவன் கூறியிடு மேன்மைபோ - லாறாறு
மொன்றொன்றா நாடியுணர்ந் தோதிலதி லுற்றறி
நின்றபொரு டானேகா ணீ. [வாய்]

ஓதில்	-	சொல்வதாயின்
ஆறு சுவையும்	-	ஆறு சுவைகளையும்
		(அவற்றிற்கு)
வேறு ஒருவன்	-	வேறாய ஒரு மனிதன்
அருந்தி	-	சுவைத்து
அவை தம்மை	-	அவற்றை

(இஃது இன்ன சுவை, இஃது இன்ன சுவை என்று அறிந்து)

கூறியிடும்	-	கூறுகிற
மேன்மைபோல்	-	தன்மைபோல்
		(தத்துவங்கள்)
ஆறு ஆறும்	-	முப்பத்தாறையும்
ஒன்று ஒன்று ஆ	-	ஒவ்வொன்றாக
நாடி உணர்ந்து	-	ஆராய்ந்து கண்டு
அதில்	-	அத்தத்துவக் கொத்தில்
உற்று	-	பொருந்தி

அறிவு ஆய் - சேதனமாய்

நின்ற பொருளே - நிற்கிற பொருளே

நீ - நீ அதாவது உயிர் என்பதை

காண் - தெரிவாயாக

ஏ யைப் பொருள் என்பதோடு கூட்டுக.

தான், அசை.

சுவைப்பொருளை அருந்திச் சுவையை யறியும் மனிதன் போலத் தத்துவங்களைச் சார்ந்து அவற்றையறியுந் தன்னறிவுடையது உயிர். நான், நீ, அவன் முதலியவெல்லாம் தூய சித்தாகிய சிவமும், அசித்தாகிய பாசமுமல்லாது அவ்விரண்டையும் அறிந்து நுகர்வதாகிய உயிர்களே யாம்.

சிவன் உயிருக்கு வேறாதல்

27. குன்றா வருளாலே கூறினீ ரென்வடிவு
பொன்றாத நும்முருவம் போதியீர் - நின்றருக்கன்
கண்ணுக்குக் காட்டுமாப் போலே யுனதறிவி
னண்ணியறி வித்திடுவோ நாம்.

(ஆசாரிய மூர்த்தியே! உமது)

குன்றா அருளால் - குறைவுபடாத அருள் கொண்டு

என் வடிவு - ஆன்ம வியல்பை

(அடியேனுக்கு)

கூறினீர் - விளக்கினீர்

(இனி, என்றும்)

பொன்றாத - அழியாத

நும் உருவம் - உமது இயல்பை

போதியீர் - உணர்த்துவீராக

(என விண்ணப்பித்த சீடருக்கு அவர் பின்வருமாறு உணர்த்தினார்)

அருக்கன் - சூரியன்

கண்ணுக்கு - கண்ணுக்கு

நின்று - (வேறாய்) நின்று

(தன் ஒளியால் பொருளை)

காட்டுமாப்போல் - காட்டிவருவதுபோல்

நாம் - யாம்

(உனக்கு வேறாய் நின்று)

உனது அறிவில் - உனது அறிவில்

(எமது சத்தியால்)

நண்ணி - பொருந்தி

(அவ்வறிவு அறியுமாறு)

அறிவித்திடுவோம் - அறிவித்து வருவோம்.

ஏ க்கள் அசை

சிவன் உயிரில் அதுவே யாதல்

28. அன்றியுங்கே ளான்மாவா லாய்ந்தறியு மைம்பொறிக
ளின்றி யறியா விவையென்ன - நின்றதுபோ
லோவாம லுன்னை யுணர்த்துவோ முன்னறிவின்
மேவாமன் மேவிநா மே

அன்றியும் கேள் - இன்னுங் கேட்பாயாக

(விடயங்களை)

ஆன்மாவால் - ஆன்மாவின் உபகாரத்தால்

ஐம்பொறிகள் - பஞ்சேந்திரியங்கள்

ஆய்ந்து அறியும் - கூர்ந்து அறியும்.

(அவ்வுபகாரம்)

இன்றி - இல்லாமல்

இவை - இவ்விந்திரியங்கள்

அறியா - அறியமாட்டா.

என்ன - இங்ஙனம்

(இந்திரியங்கள் அறிதற்கு உயிர் இந்திரியங்களேயாய்)

நின்றதுபோல் - நிற்றல்போல்

நாம் - யாம்

உன் அறிவில் - உனது அறிவினுள்

மேவாது மேவி - பொருந்தாமற்பொருந்தி

(நீயேயாய் நின்று)

ஓவாமல் - இடைவிடாமல்

உன்னை உண்ர்த்துவோம் - உன்னறிவை விளக்கி வருவோம்.

ஏ, அசை

மேவாமல் மேவுதலாவது ஒரு பொருள் தான் அழியாமல் இன்னொரு பொருளே யென்னுமாறு அதிற்கலத்தல்.

சிவன் உயிரின் உடனாதல்

29. அக்கரங்கட் கெல்லா மகரவுயிர் நின்றாற்போன்
மிக்க வுயிர்க்குயிராய் மேவினோ - மெக்கண்ணு
நில்லா விடத்துயிர்க்கு நில்லா தறிவென்று
நல்லா கமமோது நாடு.

அக்கரங்கட்கு எல்லாம்	- எல்லா எழுத்துக்களிலும்
அகர உயிர்	- அ என்னும் உயிரெழுத்து

(இயைந்து அவற்றை இயக்கி)

நின்றாற்போல்	- நிற்றல் போல
மிக்க	- கணக்கில்லாதன வாகிய
உயிர்க்கு	- ஆன்மாக்களிடத்தில்

(இயைந்து அவற்றை இயக்கும்)

உயிராய்	- உயிராய்
மேவினோம்	- (யாம்) பொருந்தினோம்

(அவற்றிற்கு உள்ளும் புறம்புமாகிய)

எக்கண்ணும்	- யாண்டும்

(யாம் கலந்து)

நில்லாவிடத்து	- நிற்கவில்லையானால்
உயிர்க்கு	- அவ்வான்மாக்களுக்கு
அறிவு நில்லாது என்று	- அறிவு நிகழாது என்று
நல் ஆகமம்	- சிறந்த சிவாகமங்கள்
ஓதும்	- எடுத்துரைக்கும்.
நாடு	- (நீ இதைச்) சிந்திப்பாயாக.

ஆசாரியர் வாக்காகிய நாம் என்பது சிவனைக் குறிக்கும்.

'சூரியன்............சிந்திப்பாயாக' என்பது ஆசாரியர் சொன்னது. சூரியன் என்பது 27-ஆம் செய்யுட் பதவுரையிலும், சிந்திப்பாயாக என்பது இச் செய்யுட் பதவுரை முடிவிலும் உள்ளன. 28-ஆம் செய்யுட் பதவுரையும் அடங்கும்.

சிவம் உயிரில் வேறாயும் ஒன்றாயும் உடனாயும் இருந்து அதனறிவை விளக்கும்.

சூரியனும் கண்ணும் வேறு வேறு பொருள்கள். ஆயினும் சூரியனொளி கண்ணொளியிற் கலந்து காட்டுகிறது. அதனாற் கண் காண்கிறது. அதுபோல் சிவமும் உயிரும் வேறு வேறு பொருள்கள். ஆயினும் சிவசத்தி உயிரின் சத்தியிற் கலந்து அறிவிக்கும். அதனால் உயிர் அறியும்.

ஞானேந்திரியங்கள் அறியுங் கருவிகள். அவை அறிகின்றன. எதனால்? உயிர் அவற்றில் தங்கி அவையேயாய் நிற்கும். அதனாற்றன் அவை அறியும். அதுபோல் உயிர் அறிகிறது. எதனால்? சிவம் அவ்வுயிரில் தங்கி அவ்வுயிரேயாய் நிற்கும். அதனால் உயிர் அறியும்.

அ என்பது ஓ ரெழுத்து. அதுவே தலையாயது. அது மற்றை உயிரெழுத்து மெய்யெழுத்துக்க ளெல்லாவற்றிலும் உடங்கியைந்து அவற்றை இயக்குகிறது. அதுபோல் சிவம் ஒன்றே. அதுவே தலையாயயது. உயிர்கள் பல. அஃது அவற்றிலும், அவை அறியும் விடங்களிலும் இயைந்து உடன் நிற்கும். அஃது அறிவிக்கு முறை அங்ஙன மாயது. அதனால் உயிர்கள் அறியும்.

சீடர் வேண்டல்

30. நற்றவத்தோர் தான்காண நாதாந்தத் தஞ்செழுத்தா
லுற்றுருவாய் நின்றாட லுள்ளபடி - பெற்றிடநான்
விண்ணார் பொழில்வெண்ணை மெய்கண்ட நாதனே
தண்ணா ரருளாலே சாற்று

விண் ஆர்	- ஆகாயத்தை யளாவிய
பொழில்	- சோலைகள் நிறைந்த
வெண்ணை	- திருவெண்ணெய்நல்லூரில்
	(எழுந்தருளிய)
மெய்கண்ட நாதனே	- மெய்கண்ட நாதரே!
நல் தவத்தோர்	- நல்ல தவஞ்செய்தவர்
காண	- காணும்படி
நாத அந்தத்து	- நாதத்தின் முடிவில்
அஞ்சு எழுத்தால்	- பஞ்சாக்கர மந்திரத்தால்
உற்ற	- கொண்ட
உருவாய் நின்று	- திருவுரு வுடையராய் நின்று
ஆடல்	- (செய்யும்) நிருத்தத்தை
உள்ளபடி	- உள்ளவாறே
நான் பெற்றிட	- அடியேன் தரிசிக்கும் வகையை
தண் ஆர்	- ஈரம் நிறைந்த

அருளால் - கிருபையால்
சாற்று - சொல்லியருள்வீராக
தான், அருளாலே என்பதிலுள்ள ஏ அசைகள்.
உற்றுரு, பெயரெச்ச ஈறு திரிந்தது.

இச் செய்யுளில் ஆறாவது வினா ஞாபகப்படுத்தப்பட்டது.

நிருத்தம் செய்யும் இடம், நோக்கம்

31. எட்டு மிரண்டு முருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள் - சிட்டன்
சிவாயநம வென்னுந் திருவெழுத்தஞ் சாலே
யவாயமற நின்றாடு வான்.

புதல்வா - நன் மாணாக்கனே!
எட்டும் இரண்டும் - ய என்னும்
உரு ஆன - எழுத்தாற் குறிக்கப்படும்
லிங்கத்து - ஆன்மாவில்
(சிவபிரான் செய்கிற)
நட்டம் - நிருத்தத்தை
நவில - (யாம்) சொல்ல
கேள் - (நீ) கேட்பாயாக
சிட்டன் - சிவபிரான்
திரு - முத்தியை (அருளவல்ல)
சிவாய நம என்னும் - சிவாய நம என்கிற
அஞ்சு எழுத்தால் - பஞ்சாக்கரத்தால்
(திருமேனி தரித்து ஆன்மாக்களுக்கு)
அவாயம் அற - துன்பந் தொலையும்படி
நின்று - அவற்றில் நின்று
ஆடுவான் - நிருத்தம் புரிவான்
ஏ, ஏ, அசைகள்

எட்டும் இரண்டும் பத்து. அவ்வெண்ணின் குறி தமிழிலும் கிரந்தத்திலும் ய என்பது. அஃது அவ்விரு மொழி எழுத்துக்களிலுள்ள ய என்ற உயிர்மெய்யெழுத்துப்போ லிருக்கும். பஞ்சாக்கரம் வடமொழி யாகலின் அதிலுள்ள யகாரம் அக்கிரந்த வெழுத்தாகிய யகாரமே. அம்மந்திரத்தில் உயிரென நிற்பது அதுவே. அவ்வுயிர் சிவ நிருத்தத்திற்கு அரங்கம். அந்நிருத்தத்திற்குப் பயன் ஆன்மாக்களின் பிறவித் துயர நீக்கம்.

கிரந்த வெழுத்துப் பெரும்பாலும் தமிழெழுத்துப் போலிருப்பதனால் தமிழெழுத்தின் திரிபேயெனக் கூறுவதுண்டு. வடமொழி தமிழகத்துக்துக்கும் உரியதென வாதிக்கு மளவிற்கு அக்கூற்று ஆதாரமாகும். ஆனால் அச்சீரிய மொழிக்குத் தனிப்பட்டதாய்ப் புராதனமாய், உரியதாய் உள்ளதே கிரந்தவெழுத்து என்பது மறுக்கப்படாத உண்மை.

நடராசரின் திருமேனி

32. ஆடும் படிகேணல் லம்பலத்தா னையனே
நாடுந் திருவடியி லேநகரங் - கூடு
மகர முதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்.

ஐயனே	- நன் மாணாக்கனே!
நல் அம்பலத்தான்	- அழகிய திருச்சிற்றம்பலமுடையான்
ஆடும்படி	- நிருத்தஞ் செய்யுங் கோலத்தை
கேள்	- கேட்பாயாக
நாடும்	- விரும்பத் தகுந்த
திருஅடியில்	- திருப்பாதத்தில்
நகரம்	- ந காரமும்
உதரம்	- திருவயிற்றில்
கூடும்	- பொருந்தியுள்ள
மகரம்	- ம காரமும்
வளர்தோள்	- உயர்ந்த திருத்தோளில்
சிகரம்	- சி காரமும்
பகரும்	- வேதாகமங்களை யருளிய
முகம்	- திருமுகத்தில்
வா	- வ காரமும்
முடி	- திருமுடியில்
ய	- ய காரமும் (இருப்பதை)
பார்	- அறிவாயாக

ஏ, அசை.

அவருக்குப் பஞ்சாக்கரம் திருமேனி யாயிற்று. இங்கு ந முதலாகச் சொல்லப்பட்டது.

அவருக்கு அவயவங்கள்

33. சேர்க்குந் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகர
மார்க்கும் யகர மபயகரம் - பார்க்கிலிறைக்
கங்கி நகர மடிக்கீழ் முயலகனார்
தங்கு மகரமது தான்.

பார்க்கில்	-	ஆராய்ந்தால்
இறைக்கு	-	நடராசருக்கு
சேர்க்கும் துடி (கரம்)	-	ஏந்தப்பட்ட உடுக்கு உள்ள திருக்கரத்தில்
சிகரம்	-	சி காரமும்
வீசு கரம்	-	வீசிய திருக்கரத்திரல்
கனசி	-	பெருமை மிக்க ஸ்ரீ யைத் தருகின்ற
வா	-	வ காரமும்
அபய கரம்	-	அபயக்குறி காட்டுந் திருக்கரத்தில்
ஆர்க்கும்	-	ஒளி பெற்ற
யகரம்	-	ய காரமும்
அங்கி (கரம்)	-	அக்கினி ஏந்திய திருக்கரத்தில்
நகரம்	-	ந காரமும்
முயலகன் ஆர்	-	முயலகன் அழுந்திப் பொருந்துகின்ற
அடிக்கீழ்	-	திருவடியில்
மகரம்	-	ம காரமும்
தங்கும்	-	அமையும்

அது பகுதிப்பொருள் விகுதி, தான், அசை.

சிக்கன - கன சி என மாற்றப்பட்டது. ஸ்ரீ என்பது சீ என்றாய்ச் சி என நின்றது. ஸ்ரீ - ஞானம், முத்திச் செல்வம்.

நடராசரின் அவயவங்களும் பஞ்சாக்கரம்.

அது இங்குச் சி முதலாகச் சொல்லப்பட்டது.

அவரைச் சூழ்ந்திருப்பன

34. ஓங்கார மேநற் றிருவாசி யுற்றதனி
னீங்கா வெழுத்தே நிறைசுடரா - மாங்கார
மற்றா ரறிவரணி யம்பலத்தா னாடலிது
பெற்றார் பிறப்பற்றார் பின்.

ஓங்காரம்	-	பிரணவமே
நல் திருவாசி	-	நல்ல திருவாசியாகும்
அதனில் உற்று	-	அதிற் பொருந்தி
நீங்கா எழுத்தே	-	நீங்காத பஞ்சாக்கரமே
நிறை சுடர் ஆம்	-	(உள்) நிறைந்த ஒளியாகும்.

(அதை)

ஆங்காரம்	-	அகங்கா மமகாரங்கள்
அற்றார்	-	நீங்கப் பெற்றவரே
அறிவர்	-	அறிவார்

(அவற்றை நீங்கி அதை அறிந்து)

அணி அம்பலத்தான்	-	அழகிய திருச்சிற்றம்பலமுடையானது
ஆடல் இது	-	இந் நிருத்தத்தை
பெற்றார்	-	தரிசிக்கப் பெற்றவர்
பின் பிறப்பு	-	இனிப் பிறப்பதை
அற்றார்	-	இல்லாதவராவார்

இவ் வோங்காரமும் கிரந்த எழுத்தே. திருவாசியாவது பிரபை. அதன் உள்ளொளி பஞ்சாக்கரம். யான் எனது என்னுஞ் செருக்கற்றவரே அதனை யறிந்து அந் நிருத்தத்தைத் தரிசித்துத் தம் பிறப்பை நீக்கிக்கொள்ள வல்லார்.

அவர் செய்யும் ஊன நாடகம்

35. தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்கார - மூற்றமா
வூன்று மலர்ப்பதத்தி லுற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

துடியதனில்	- உடுக்கு ஏந்திய திருக்கரத்தில்
தோற்றம்	- சிருட்டியும்
அமைப்பில்	- அமைத்த திருக்கரத்தில்
தோயும் திதி	- தோயச் செய்யுந் திதியும்
சாற்றியிடும்	- புகழப்பட்ட
அங்கியில்	- அக்கினி ஏந்திய திருக்கரத்தில்
சங்காரம்	- சங்காரமும்
ஊற்றம் ஆ	- அழுத்தமாக
ஊன்று	- ஊன்றியிருக்கிற
மலர்ப்பதத்தில்	- தாமரை மலர்போன்ற திருவடியில்
உற்ற	- பொருந்திய
திரோதம்	- திரோபவமும்
நான்ற	- குஞ்சித்த
மலர்ப்பதத்து	- தாமரை மலர்போன்ற திருவடியில்
முத்தி	- அனுக்கிரகமும் (இருப்பதை)
நாடு	- அறிவாயாக

ஏ, ஏ, அசைகள்.

அமைப்பாவது அபயகரம்.

பஞ்ச கிருத்தியமே அவர் செய்யும் நிருத்தம். உயிர்கள் பிரபஞ்சத்தோடு தொடர்புடைய காலத்து நிகழ்வன தூல பஞ்ச கிருத்தியமும், சூக்கும் பஞ்ச கிருத்தியமும். அதி சூக்கும பஞ்ச கிருத்தியமுமாம். அவை ஊன நிருத்தம் அல்லது ஊன நாடகம் எனப்படும்.

அவர் செய்யும் ஞான நாடகம்

36. *மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டுமலஞ்*
சாய வமுக்கியரு டானெடுத்து - நேயத்தா
லானந்த வாரிதியி லான்மாவைத் தானழுத்த
றானெந்தை யார்பரதந் தான்.

நேயத்தால்	- பரம கிருபையினால்

(பக்குவான்மாவின்)

மாயைதனை உதறி	- மாயா மலத்தை நீக்கி
வல் வினையை	- வலிய கன்ம மலத்தை
சுட்டு	- தகித்து
மலம்	- ஆணவ மலத்தை
சாய	- (அதன் சத்தி) கெடும் படி
அமுக்கி	- கீழ்ப்படுத்தி
ஆன்மாவை	- அவ்வான்மாவை
அருள் எடுத்து	- தம் திருவருளில் வைப்பதோடு
ஆனந்த வாரிதியில்	- பேரின்பக் கடலில்
அழுத்தல் தான்	- மூழ்குவித்தலே
எந்தையார்	- எமது தந்தையாராகிய சிவபிரானாரது
பரதம்	- திருநிருத்தம் ஆகும்.

அருள் தான், ஆன்மாவைத்தான், பரதந்தான்.

தான்கள் அசை.

பக்குவான்மாவின் மாட்டு நிகழும் இச் சிவச்செயல் ஞான நாடகம் எனப்படும்.

அவர் செய்யும் ஆனந்த நாடகம்

37. மோனந்த மாமுனிவர் மும்மலத்தை மோசித்துத்
தானந்த மானிடத்தே தங்கியிடு - மானந்த
மொண்டருந்த நின்றாடல் காணுமருண் மூர்த்தியாக்
கொண்டதிரு வம்பலத்தான் கூத்து.

மோனந்தம்	- மௌனாந்தத்தில் நிற்கிற
மா முனிவர்	- உயரிய ஞானிகள்
மும் மலத்தை	- மும்மல வாசனையை
மோசித்து	- நீக்கி
தான்	- சீவபோதம்

அந்தம் ஆன	-	முடிவடைந்த
இடத்து	-	எல்லையில்
தங்கியிடும்	-	சித்திக்கிற
ஆனந்தம்	-	பேரின்பத்தை
மொண்டு அருந்த	-	வாரியத் துய்ப்பதற்காக
அருள்	-	சிவகாமசுந்தரியே

(தம் நிருத்தத்தை எப்போதும்)

காணும் மூர்த்தி ஆ	-	தரிசிக்கும் தேவியாக

(தம்மிடம் இருக்குமாறு)

கொண்ட	-	செய்து கொண்ட
திரு அம்பலத்தான்	-	நடராசர்
கூத்து	-	இயற்றும் ஆனந்தக் கூத்தாவது

(தில்லையிலே வெளிப்பட)

நின்று ஆடல்	-	நின்று ஆடுதலேயாம்
ஏ, அசை		

ஆன இடம், ஆனிடம், பெயரெச்சம் ஈறு திரிந்தது.

மௌனம் அல்லது மோனம் என்பது ஞானம். 'மோன மென்பது ஞான வரம்பு' என்றார் ஔவையார்.

சிவஞானிகள் துய்த்துவரும் பேரின்பத்தைப் பெருக்கிக் கொண்டிருப்ப தில்லையில் எழுந்தருளியுள்ள ஆனந்த தாண்டவ மூர்த்தியின் தரிசனம்.

திருநிருத்தப் பயன்

38. உரையுணர்வுக் கெட்டா வொருவன்மிகு பஞ்சாக்
கரத்தால் வரைமகடான் பாதி - பரையிடமாக்
காணும் படியே கருணையுருக் கொண்டாடல்
பேணுமவர்க் குண்டோ பிறப்பு.

உரை உணர்வுக்கு	-	வாக்குக்கும் மனதுக்கும்
எட்டா	-	அகப்படாத
ஒருவன்	-	ஒப்பற்ற பரசிவன்
பரை இடம் ஆ	-	அருளே அரங்காக

பாதி	- இடப்பாகத்திலுள்ள
வரை மகள்	- பார்வதி
காணும்படி	- தரிசிக்குமாறு
மிகு	- மாண்புற்ற
பஞ்சாக்கரத்தால்	- பஞ்சாக்கரத்தால்
கருணை உருக்கொண்டு	- அருட் டிருமேனி தாங்கி
ஆடல்	- ஆடுவதை
பேணுமவர்க்கு	- விரும்புகிறவருக்கு
பிறப்பு உண்டோ	- மீண்டும் பிறப்பில்லை

தான், ஏ அசைகள்

சிவபிரான் ஆடும் இடமும் அருள். எடுக்குந் திருமேனிகளும் அருள், ஆட்டத்தை உயிர்களின் பொருட்டுத் தரிசித்துக் கொண்டிருப்பதும் அருள். அவர் கொள்ளும் அருட்டிருமேனி அதிசூக்கும வடிவம். உயிரைத் திருமேனியாகக் கொள்வது சூக்கும வடிவம், பஞ்சாக்கரத் திருமேனி தூலவடிவம். அருளால் இயக்கப்படுவது உயிர். பஞ்சகிருத்திய சத்திகள் பஞ்சாக்கரம்.

திரு நிருத்தத்தை விரும்பி வழிபடும் பாக்கியமுடையார்க்குப் பிறவிநோய் நீங்கும்.

இச்செய்யுளிலுள்ள முதலிரண்டடி பல பதிப்புக்களிலுள்ளபடி இங்குங் கொள்ளப்பட்டது. ஆனால்

'பரையிடமா நின்றுமிகு பஞ்சாக் கரத்தால்

உரையுணர்வுக் கெட்டா ஒருவன் - வரைமகள் தான் என ஒருபதிப்பி லுள்ளது. ஆயினும் பொருள் பேதிப்பதாகத் தெரியவில்லை. ஆதலின் அறிஞர் ஆயந்து கொள்ளத் தக்கது கொள்க.

சீடர் வேண்டல்

39. நாதாந்த நாடகத்தை நன்றா - வருள்செய்தீ
ரோதீ ரெழுத்தஞ்சு முள்ளபடி - தீதறவே
யஞ்செழுத்தீ தாகி லழியுமெழுத் தாய்விடுமோ
தஞ்ச வருட்குருவே சாற்று.

தஞ்ச	-	(அடியேனுக்குப்) புகலிடமான
அருள் குருவே	-	அருளுருவாகிய ஆசாரிய மூர்த்தியே!
நாத அந்த	-	நாத முடிவில் (இயற்றப்படும்)
நாடகத்தை	-	திரு நிருத்தத்தை
நன்று ஆ	-	தெளிவாக
அருள் செய்தீர்	-	உணர்த்தினீர்.

(இனி)

அஞ்சு எழுத்தும்	-	பஞ்சாக்கரத்தையும்
உள்ளபடி	-	உள்ளவாறு
ஓதீர்	-	உபதேசித்தருள்வீராக
அஞ்சு எழுத்து ஈது	-	இப் பஞ்சாக்கரம்

(ஆன்மாக்கள் பாலுள்ள)

தீது அற	-	மலங் கெடுதற்கு
ஆகில்	-	(சாதனம்) ஆனால்

(என்றேனும்)

அழியும்	-	அழியும் இயல்புடைய
எழுத்து ஆய்விடுமோ	-	எழுத்தாகிவிடுமோ?
சாற்று	-	கூறியருள்வீராக.

ஏ, அசை.

எழுத்தஞ்சம் உம்மையைப் பிரித்துக்கூட்டி அஞ்செழுத்தும் எனக் கொள்க.

மற்ற எழுத்துக்கள் போல் அஞ்செழுத்தும் அழியும் இயல்பினதோ எனச் சங்கிக்கிறார் சீடர்.

பஞ்சாக்கரம் நித்தம்

40. உற்ற குறியழியு மோதுங்காற் பாடைகளிற்
சற்றும் பொருடான் சலியாது - மற்றதுகே
ளீசனரு ளாவி யெழிலார் திரோதமல
மாசிலெழுத் தஞ்சினடை வாம்.

ஓதுங்கால்	-	சொல்லுமிடத்து
பாடைகளில்	-	பாஷைகளில்

உற்ற	- உள்ள
குறி அழியும்	- வரிவடிவு அழிந்துபோம்

(சொல்லும் பொருளும் அங்ஙனமே. ஆனால்)

அது	- அப்பஞ்சாக்கர வியல்பை
கேள்	- கேட்பாயாக
ஆசு இல்	- அழிவில்லாத

(சிவயநம என்கிற)

அஞ்சு எழுத்தின்	- பஞ்சாக்கரத்தில்
ஆம் அடைவு	- உள்ள பொருள்கள்
எழில் ஆர்	- அழகு நிறைந்த
ஈசன்	- சிவன்
அருள்	- அருள்
ஆவி	- உயிர்
திரோதம்	- திரோதாயி
மலம்	- மலம் (என்பன. அவ்வக்கரங்கள் போல)
பொருள்	- அப்பொருள்களும்
சற்றும்	- சிறிதும்
சலியாது	- அழியா

தான், மற்று அசைகள்.

பொருள் அழியு மியல்பினதாயின் சொல்லும் அழியும். அஃதழியின் எழுத்தும் அழியும். சிவயநம என்பன அஞ்செழுத்து. அவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பதம். ஆகலின் அஞ்செழுத்தை *'அஞ்சுபதம்' என்றார் சுந்தரர். அவற்றின் பொருள் முறையே சிவன், அருள், உயிர், திரோதாயி, மலம் என்பன. அவை அழியா வியல்பின. ஆகலின் அஞ்சு பதங்களாகிய அவ்வஞ்செழுத்துக்களுமே அழிதலில்லை. அதனால் அவை அட்சரம் எனப்பட்டன. அட்சரம் - அழியாமை. மற்ற எழுத்துக்கள் இனமாதல் பற்றியும், நீண்டகால மிருத்தல் பற்றியும் அங்ஙனம் வழங்கப்படும், அமரர் என்பது போலும்.

---

* அந்தியும் நண்பகலும் அஞ்சுப தஞ்சொல்லி
முந்தி எழும்பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென்திரு வாரூர்புக்
கெந்தை பிரானாரை என்றுகொல் எய்துவதே
(சுந்தரர், திருவாரூர்.)

ஆனால் பொருளைக் குறித்து நிற்கும் சொற்கள் அழியும் தன்மைய எனக்கூறி அவ்வழிவு பஞ்சாக்கரத்துக்கு முண்டென்பர் சிலர். x 'வேத நான்கினு மெய்ப்பொருளாவது நாத னாம நமச்சி வாயவே' என்றது தேவாரம். பொருளாவது நாமம் என்பது அதிற் கண்டது. அங்ஙனமாயின் அப் பஞ்சாக்கரம் அழியுமா? 'பெரும் பெயரெனினம், மகா வாக்கியமெனினும், ஒரு வாக்கியமெனினும் ஒக்கும். பெரும்பெயர்ப்பொருளே அஞ்செழுத்திற்கு மாதலின், பெரும்பெயரோடு அஞ்செழுத்திடை வேற்றுமையின்னை யுணர்க' என்றது ஸ்ரீ பாஷ்யம். அவையெல்லாம் அழிவனவா? y 'அந்தமா திகளில் லாத வஞ்செழுத்து' என்றது சிவப்பிரகாரம் அதனால் பஞ்சாக்கரம் நித்திய மேயாதல் காண்க.

இச்செய்யுளில் '-மற்றதுகேள் ஈசனருளாவி' என்பதற்குப் பதிலா 'சிவனருளாவி' என்ற பாடம் ஒரு பதிப்பிற் காணப்படுகிறது-அது தப்பு.

நிற்கு முறை, ஓது முறை

41. *சிவனரு ளாவி திரோத மலமைந்து*
மவனெழுத் தஞ்சி னடைவா - மிவனின்று
நம்முதலா வோதிலரு ணாடாது நாடுமருள்
சிம்முதலா வோதுநீ சென்று.

சிவன் அருள் ஆவி
திரோதம் மலம் ஐந்தும் } - சிவன் முதலிய ஐந்தும்

அவன் - அச்சிவனுடைய

---

x காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

(திருஞானசம்பந்தர் 3-ம் திருமுறை)

y பந்தமா னவைய றுத்துப் பவுதிக முழலு மெல்லைச்,
சந்தியா தொழியா திங்குத் தன்மைபோல் வினையுஞ் சாரு
மந்தமா திகளி லாத வஞ்செழுத் தருளி னாலே,
வந்தவா றுரைசெய் வாரை வாதியா பேதி யாவே.

(சிவப்பிரகாசம், உண்மை 40)

அஞ்சு எழுத்தின் - பஞ்சாக்கரத்தின்

அடைவு ஆம் - உட்பொருளாகும்

இவன் - சாதகன்

ந முதல் ஆ - ந காரத்தை முதலில் வைத்து

ஓதில் - உச்சரித்தால்

அருள் நாடாது - திருவருள் வெளிப்படாது

(ஆகலின்)

நீ - நீ

(ஆசாரியன் உபதேசத்தை)

சென்று - கடைப்பிடித்து

நின்று - நிற்கு முறையில் நின்று

சி முதல் ஆ - சி காரத்தை முதலில் வைத்து

ஓது - ஓது முறையில் ஓதுவாயாக

(அப்போது உனக்கு)

அருள் நாடும் - திருவருள் வந்து கூடும்.

நமசிவய என ஓதாமல் சிவயநம என ஓத வேண்டும்.

ஓதற் பயன்

42. அண்ணல் முதலா வழகா ரெழுத்தைந்து
மெண்ணி லிராப்பகலற் றின்பத்தே - நண்ணி
யருளா னதுசிவத்தே யாக்கு மணுவை
யிருளா னதுதீர வின்று.

அழகு ஆர் - அழகு பொருந்திய

எழுத்து ஐந்தும் - ஐந்தெழுத்தையும்

அண்ணல் முதல் ஆ - சி காரம் முதலாக வைத்து

எண்ணில் - கணித்தால்

(அங்ஙனங் கணித்த)

அணுவை - சாதகனை

இன்று - அப்போது

அருள் - திருவருள்

நண்ணி	-	வெளிப்பட்டு
இருள்	-	ஆணவ மலம்
தீர	-	பற்றறக் கழியுமாறு
இரா பகல் அற்ற	-	கேவல சகலங்கள் நீங்கிய
இன்பத்து	-	சுத்தத்தின் பாலதாகிய
சிவத்து	-	சிவானந்தத்தில்
ஆக்கும்	-	செலுத்தும்

ஏ, ஏ அசைகள். ஆனது இரண்டும் உருபுகள். அற்ற இன்பம் என்பது அற்றின்பம் என நின்றது.

பஞ்சாக்கரத்தைச் சிகார முதலாக் கணிக்க. திருவருள் காட்சிப்படும். கேவல சகலங்கள் நீங்கும். சுத்தம் எய்தும். சிவானந்தானுபவம் சாத்தியமாகும். ஆணவமலம் பற்றறக் கழியும்.

இதுவு மது

43. ஆதி மலமிரண்டு மாதியா வோதினாற்
சேதியா மும்மலமுந் தீர்வாகா - போத
மதிப்பரிதா மின்பத்தே வாழலா மாறி
விதிப்படியோ தஞ்செழுத்து மே.

அஞ்சு எழுத்தும்	-	ஐந்து எழுத்துக்களையும்
ஆதி	-	திரோதாயி எழுத்தாகிய ந காரம்
மலம்	-	மல எழுத்தாகிய ம காரம்
இரண்டும்	-	என்னும் இரண்டும்
ஆதி ஆ	-	முதலில் வருமாறு
ஓதினால்	-	உச்சரித்தால்
சேதியா	-	எளிதிற்களைந்தெறியப்படாத
மும்மலமும்	-	மூன்று மலங்களும்
தீர்வு ஆகா	-	நீங்கமாட்டா

(ஆதலின் அம்மந்திரத்தை)

மாறி	-	சி காரமுதலாக மாற்றி
விதிப்படி	-	விதிப்படி
ஓது	-	உச்சரிப்பாயாக

(உச்சரித்தால்)

போதம் - சீவபோதத்தால்

மதிப்பு அரிது ஆம் - அறிதற்கு அரிய தாகிய

இன்பத்து - வீட்டின்பத்தில்

வாழலாம் - வாழுதல் உறுதி

ஏ, ஏ அசைகள்.

சீவபோதமாவது சுட்டுணர்வு அல்லது ஏகதேச ஞானம் வீடாவது மோட்சம்.

சி கார முதலாய ஐந்தெழுத்தும் சூக்கும பஞ்சாக்கரம் அல்லது முத்தி பஞ்சாக்கரம் எனப்படும். மோட்சகாமிகள் அதனையே விதிப்படி ஓத வேண்டும். ஓதலாவது அறிவாற் கணித்தல்.

பஞ்சாக்கரமே மந்திர ராஜம்

44. *அஞ்செழுத்தே யாகமமு மண்ண லருமறையு*
மஞ்செழுத்தே யாதிபுரா ணம்மனைத்து - மஞ்செழுத்தே
யானந்த தாண்டவமும் யாவைக்கு மப்பாலா
மோனந்த மாமுத்தி யும்.

அண்ணல் - சிவபிரான் அருளிய

ஆகமமும் - ஆகமங்களும்

அரு மறையும் - அரிய வேதங்களும்

அஞ்சு எழுத்தே - பஞ்சாக்கர விளக்கமே

(அவர் அருளிய)

ஆதி புராணம் - தலையாய புராணங்கள்

அனைத்தும் - எல்லாமும்

அஞ்சு எழுத்தே - பஞ்சாக்கர விளக்கமே

(சீவன்முத்தியில் உபகரிக்கும்)

ஆனந்த தாண்டவமும் - ஆனந்த நிருத்த தரிசனமும்

யாவைக்கும் - எல்லாத் தத்துவங்களுக்கும்

அப்பால் ஆம் - அதீத மாவதும்

மோனந்தம் ஆம் - மௌனாந்த விளைவாவதும்

(ஆகிய)

முத்தியும் - பரமுத்தியும்

அஞ்சு எழுத்தே - பஞ்சாக்கரப்பயனே

வேதம் நான்கினும், சிவாகமம் இருபத்தெட்டினும் புராணம் பதினெட்டினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமமாகிய பஞ்சாக்கரமே.

வேத சிவாகமங்களின் பெயர் விநாயக வணக்கச் செய்யுளுரையிற் சொல்லப்பட்டது. பிரமம், பதுமம், வைணவம், சைவம், பாகவதம், பவிடியம், நாரடீதயம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பிரமகைவர்த்தம், இலிங்கம், வராகம், காந்தம், வாமனம், மற்சம், கூர்மம், காருடம், பிரமாண்டம் எனப் புராணம் பதினெட்டு இவையும் வடமொழியிலுள்ளன.

'யாவைக்கும்' என்ற இடத்தில் 'ஆறாறுக்கு' என ஒரு பதிப்பிலுள்ளது. அது புதுப்பாடம் போலும்.

சுத்தாத்வைத முத்திநிலை ஒரு திருட்டாந்தம்

45. முத்தி தனையடைந்தோர் முந்துபழம் போதங்கி
வித்தகமாம் வீணை யிவையிற்றி - னொத்த
விரதமணம் வெம்மை யெழினாதம் போல
விரவுவரென் றோதும் விதி.

முத்திதனை அடைந்தோர்	-	பரமுத்தர்
முந்து பழம்	-	முதிர்ந்த பழம்
போது	-	பூ
அங்கி	-	தீ
வித்தகம் ஆம்	-	அற்புதமான
வீணை	-	வீணைப்பண்
இவையிற்றின்	-	(ஆகிய) இவற்றின்
ஒத்த	-	இயைந்துள்ள
இரதம்	-	சுவை
மணம்	-	வாசம்
வெம்மை	-	சூடு
எழில்	-	இனிய
நாதம் போல	-	ஓசை போல
		(சிவத்தில்)
விரவுவர் என்று	-	அத்துவிதமாய் இயைந்து (தற்போதம் மடங்கிக்) கிடப்பர் என்று

விதி - வேதாகமங்கள்

ஓதும் - சொல்லும்

பழத்திற் சுவை, பூவில் வாசம், நெருப்பிற் சூடு, யாழிலிருந்து எழும் பண்ணில் ஓசை இயைந்திருத்தல் போலச் சிவத்திற் பரமுத்தர் அத்துவிதமா யியைந்து சீவபோத மடங்கிக் கிடப்பர்.

இன்னொரு திருட்டாந்தம்

46. தத்துவங்க ளெல்லாஞ் சகசமா யான்மாவிற்
பெத்தத்தி னிற்கின்ற பெற்றிபோல் - முத்திதனிற்
சித்தமல மற்றார் செறிந்திடுவ ரென்றுமறை
சத்தியமா வோதியிடுந் தான்.

பெத்தத்தில் - பந்த தசையில்

ஆன்மாவில் - ஆன்மாவினிடத்தில்

தத்துவங்கள் எல்லாம் - எல்லாத்தத்துவங்களும்

(தாம் வேறு, அவ்வான்மா வேறு எனப் பிரித்தறிய முடியாதபடி அவ்வான்மாவே யென்னுமாறு)

சகசம் ஆய் - இயைபுடையனவாய்

நிற்கின்ற பெற்றிபோல் - நிற்கும் தன்மை போல்

சித்தம் - (அநாதியாகக்) கிடைத்த

மலம் - மும்மலங்களும்

அற்றார் - அறப்பெற்ற முத்தர்

முத்திதனில் - பரமுத்தியில்

(சிவத்தினிடம் தாம் வேறு சிவம் வேறு எனப் பிரித்தறிய வாராது அச் சிவமே யென்னுமாறு)

செறிந்திடுவர் - அத்துவிதமாய்க் கலந்து நிற்பார் என்று

மறை - வேதாகமங்கள்

சத்தியம் ஆ - உண்மையாகவே

ஓதியிடும் - சொல்லும்

தான், அசை

முற் செய்யுளில் சிவத்தோடு முத்தான்மாக் கலந்து நிற்பதற்குப் பழத்திற்சுவை யென்பது முதலிய திருட்டாந்தங்கள் நான்கு சொல்லப்பட்டன. அவற்றுள் பழம், பூ' தீ, பண் என்பன குணி; இரதம், மணம், வெம்மை, நாதம் என்பன முறையே அவற்றின் குணம். அக் கலப்புக்கு மாத்திரம் அத்திருட்டாந்தங்கள் உதவும். ஆனால் அத்திருட்டாந்தங்களைக் கொண்டு சிவம் குணியும் அவ்வான்மா குணமும்போலு மெனச் சிலர் மயங்கலாம். சிவம் குணியும், ஆன்மா அதன் குணகுமல்ல. அவ்விரண்டும் வேறு வேறு குணமுடைய குணிகளே, அதாவது பொருள்களே. அவ்வுண்மையை விளக்குகின்றது. இச்செய்யுளின் திருட்டாந்தம். தத்துவங்களாவன கருவி கரணங்கள். அவையும் ஆன்மாவும் இரு வேறு பொருள்கள். ஆயினும் அவை இயைந்து நிற்கின்றன. அக்கருவி கரணங்கள் ஆன்மாவே யென்னுமாறு அவ்வியைபிருக்கிறது. அப்படியே முத்தான்மாவும் சிவமே யென்னுமாறு அச் சிவத்தில் இயைந்து நிற்கும். ஆயினும் அம்முத்தியிலும் பொருளாற் சிவம் வேறு, ஆன்மா வேறு தான்.

பின்னொரு திருட்டாந்தம்

47. *ஆதவன்றன் சன்னிதியி லம்புலியி னார்சோதி*
பேதமற நிற்கின்ற பெற்றிபோ - னாதாந்தத்
தண்ண றிருவடியி லான்மா வணைந்தின்பக்
கண்ணி லழுந்தியிடுங் காண்.

அம்புலியின்	- சந்திரனிடத்தில்
ஆர் சோதி	- உள்ள ஒளி
ஆதவன்றன் சன்னதியில்	- சூரியன் முன்
பேதம் அற	- தனித்துக் காணப்படாமல் (அச்சூரியனொளியி லடங்கி)
நிற்கின்ற பெற்றிபோல்	- நிற்கிற தன்மை போல
நாத அந்தத்து	- நாத முடிவிலுள்ள
அண்ணல்	- சிவபிரானது
திருவடியில்	- திருவருள் ஞானத்திலுள்ள
ஆன்மா	- பரமுத்தர்
இன்பக் கண்ணில்	- பேரின்பத்தில்
அணைந்து	- தோய்ந்து
அழுந்தியிடும்	- (முனைப்பற்றுக்) கிடப்பர்
காண்	- (இதை) அறிவாயாக.

சூரிய சன்னதியில் சந்திரனொளி மங்கிப்போம். அதுபோல் முத்தியின்ப அனுபவத்தில் முத்தான்மாவுக்கு முனைப்பு அடங்கிவிடும். அதைக் காட்டுவது இத்திருட்டாந்தம்.

அத்வைத சம்பந்தம் அநாதி

48. சென்றிவன்றா னொன்றிற் சிவபூ ரணஞ்சிதையு
மன்றவன்றா னொன்றுமெனி லந்நியமா - மின்றிண்டு
மற்றநிலை யேதென்னி லாதித்த னந்தன்விழிக்
குற்றமற நின்றதுபோற் கொள்.

அன்று - பந்தத்தில்

இவன் - ஆன்மா

(தன் அறிவால் சிவன்பால்)

சென்று - சென்று (அவனோடு)

ஒன்றின் - பொருந்துமெனக் கொண்டால்

(அப்பந்தத்தில் ஆன்மாச் சிவனுக்கு வெளியிலிருந்ததெனப்பட்டு)

சிவ பூரணம் - சிவனது வியாபகத் தன்மை

சிதையும் - குற்றப்படும்

இன்று - முத்தியில்

(ஆன்மாவிடம்)

அவன் - சிவன்

ஒன்றும் எனில் - வந்து பொருந்துவனெனக் கொண்டால்

(எந்நிலையிலும் உபகாரி யெனப்படும் அச்சிவன் ஆன்மாவிற்குப் பந்தநிலையில்)

அன்னியம் ஆம் - வேறா யிருந்தானாவான்

(அதனால் அவனது உபகாரத்தன்மை குற்றப்படும். ஆகலின் ஆன்மா வருதலும், சிவன் வருதலுமாகிய)

இரண்டும் - இரண்டு பகுதிகளும்

அற்ற நிலை - இல்லாமையை

(விளக்குந் திருட்டாந்தம்)

ஏது என்னில் - எது என்றால்

அந்தன் விழி - குருடனது கண்ணின்

குற்றம் - குற்றமாகிய படலம்

அற - நீங்க

(அக் கண்ணொளியும்)

ஆதித்தன் - சூரியனொளியும்

நின்றது போல - இயைந்து நின்றது போலும் (என)

கொள் - கொள்வாயாக.

தான்கள் அசை.

கண்ணுக்கு ஒளி குணம், படலம் குற்றம். அக்குற்றம் நீங்கின் அக்குணமாகிய ஒளி சூரியனொளியில் இயையும். அஃதியற்கை. கண்ணொளி சூரிய னொளியோடு இயைந்தே யிருப்பது கண்ணுள்ளவரிடம் அனுபவத்திற் காணப்படும். அவ்விரண்டொளிகளுக்கும் போக்குவரத்தாகிய புடை பெயர்ச்சியில்லை. படலநீக்கமே வேண்டற்பாலது. அதுபோல் சிவன் சர்வ வியாபி. கண்ணுக்குப் படலம்போல் ஆன்மாவுக்கு மலசம்பந்தம் குற்றம். ஆன்ம ஞானத்தை மறைத்திருப்பது அதுவே. அது நீங்கின் அந்த ஞானம் சிவனது வியாபக ஞானத்தில் இயையும், அவ்வியையும் இயற்கை. அவ்விருஞானங்களுக்கும் புடை பெயர்ச்சி கிடையாது. மலசம்பந்தம் என்னுந் தடை நீங்க வேண்டும். அவ்வளவே.

சீடர் வேண்டல்

49. *வாக்கு மனமிறந்த வான்கருணை யாளனுருத்*
தாக்கறவே நிற்குந் தனிமுதல்வா - நீக்காப்
பதியினைப்போ னித்தம் பசுபாச மென்றாய்
கதியிடத்து மூன்றினையுங் காட்டு.

வாக்கு மனம் இறந்த - பாசஞான பசு ஞானங்களால் அறிதற்கு அகப்படாத

வான் - அதி பரிசுத்த

கருணையாளன் - சிவபிரானே

உரு - திருமேனி கொண்டு

(பிரபஞ்ச விடயங்களால்)

தாக்குஅற	-	தாக்கப்படாமல்
நிற்கும்	-	எழுந்தருளியுள்ள
தனி முதல்வா	-	ஒப்பற்ற ஆசாரிய சிரேட்டரே!
நீங்கா	-	வியாபகமாகிய
பதியினைப்போல்	-	பதிப்பொருளைப் போன்று
பசு பாசம்	-	பசுப் பொருளையும், பாசப் பொருளையும்
நித்தம் என்றாய்	-	அழியாதன என்றீர்
கதியிடத்து	-	முத்தி நிலையில்
மூன்றினையும்	-	அம்முப் பொருள்களின் நித்தத்தையும்

(அடியேனுக்கு)

காட்டு	-	விளக்கி யருள்வீராக

ஏ அசை. நீங்கா என்றது எதுகை நோக்கி நீக்கா என வலித்தது.

பதி பசு பாசங்கள் அநாதி நித்தப்பொருள்கள். முத்தியில் அவை எப்படி யிருக்கும்? அதற்கு விடை வேண்டுகிறார் சீடர்.

முத்தியில் அவை செய்வன

50. முத்திதனின் மூன்று முதலு மொழியக்கேள்
சுத்தவனு போகத்தைத் துய்த்தலணு - மெத்தவே
யின்பங் கொடுத்தலிறை யித்தைவிளை வித்தன்மல
மன்புடனே கண்டுகொளப் பா.

அப்பா	-	நன்மாணாக்கனே!
முத்திதனில்	-	பரமுத்தியில்
மூன்று முதலும்	-	அம்முப் பொருள்களின் நித்தத் தன்மையை
மொழிய	-	(யாம்) சொல்ல
கேள்	-	(நீ) கேட்பாயாக
சுத்த அனுபோகத்தை	-	அம் முத்தி யின்பத்தை
துய்த்தல்	-	நுகர்ந்து கொண்டிருப்பது
அணு	-	முத்தான்மா
மெத்த	-	இடையீடின்றி

இன்பம் - அவ்வின்பத்தை
கொடுத்தல் - கொடுத்து வருவது
இறை - சிவபரம்பொருள்
இத்தை - அவ்வின்பத்தை
விளைவித்தல் - இயைவித்து நிற்பது
மலம் - மலம்
(இவ்வுண்மையை எம் வார்த்தையில்)
அன்புடன் - விசுவாகம் வைத்து
கண்டுகொள் - அறிந்துகொள்வாயாக.

ஏ, ஏ அசைகள்.

முத்தியின்பத்தை நுகர்வது ஆன்மா, கொடுப்பது சிவபரம் பொருள். ஆனால் அவ்வின்பத்தை விளைவிப்பது மலம் என்றுஞ் சொன்னார் ஆசிரியர். அஃதெப்படி? அதற்கு விடை காணத் துணை புரிவது 'கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே யெடுப்பதூஉ மெல்லா மழை' என்ற திருக்குறள். கெடுப்பதும் எடுப்பதும் மழை யென்றதது. கெடுக்கும் மழையால் எடுக்க முடியுமா? எடுக்கும் மழையால் கெடுக்க முடியுமா? ஆம். அம்மழை யொன்றே. அதனால் இரண்டும் முடியும். அது பெய்யாமற் கெடுக்கும், பெய்து எடுக்கும். பெய்யாமையும் பெய்தலும் மழையின் மறுதலைத் தொழில். 'மற்று வினைமாற்றின்கண் வந்தது. ஆங்கென்பது மறுதலைத் தொழி லுவமத்தின் கண்வந்த உவமச் சொல்' என்பது அக்குறளுக்குப் பரிமேழகர் தந்த குறிப்பு. 'கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை' என்ற திருவாசகமுங் காண்க. அம்மழை போலவே மலமும் ஆன்மாக்களுக்கு முத்தி யின்பத்தைக் கெடுக்கவுஞ் செய்யும், கொடுக்கவுஞ் செய்யும். கெடுத்தலாவது தடுத்தல். கொடுத்தலாவது விளைவித்தல். அஃது அநாதியே ஆன்மாவைப் பற்றி நின்று முத்தி யின்பத்தைத் தடுத்தும், சிவகிருபையால் ஆன்மாவினின்றும் விலக்கப்பட்டு நின்று விளைவித்தும் வருமென்க. மழை தனது பெய்யாமைத் தொழிலாற் கெடுப்பது. மலம் தனது பற்றாமை (நீக்க) த் தொழிலால் விளைவிப்பது. ஆகலின் 'கெடுப்பதூ உம் – பூமியின் கண் வாழ்வாரைப் பெய்யாது நின்று கெடுப்பதூஉம்......மழை' என்ற உரைபோல் 'இத்தை விளைவித்தல் மலம்' என்ற விடத்து மலம் என்றதற்கு மலத்தின் நீக்கம் என்றதே பொருளாகி முத்தான்மாக்கள் நுகரும் இன்பத்தை அந் நீக்கமே விளைவிக்கும் எனக்கொள்க. 434 ஆம் குறளில் 'குற்றமே காக்க பொருளாக' என்றதிலுள்ள 'குற்றமே' என்பதற்குக் 'குற்றம் தன் கண் வாராமையே' எனப் பொருள் கொள்ளப்பட்டிருப்பதையும் நோக்குக. ஸ்ரீபாஷ்யம் '..........அதுவது வாய்நின் றநுபவிக்கும் ஆன்மா ஏனையவற்றையும் அறிவுழிச் சிவாநுபவ விளைவிற் குறைபடு மாதலின் ஏனையவற்றை யறிதல்முத்திப் பெரும் பயனுக்கு இடையூறென்பதும் ஏனையவற்றை யறியாமையே முத்திப் பெரும் பயனுக்குச் சிறந்த

காரணமென்பது முணராது. இக்கருத்தே பற்றியன்றே 'இன்பங் கொடுத்தலிறை யித்தை விளை வித்தன் மலம்' என்றோதிய தென்பதூஉ முணராது.......' என்றது. முத்தன்மாவுக்கு மலம் அறிய வாராது அங்ஙனம் அது தன் வாராமையால் அதாவது நீக்கத்தால் அவ்வான்மாவுக்கு முத்தியின்பத்தை விளைவிக்கும் என்பது அப்பேருரையாலும் எளிதிற் புலனாம்.

ஆனால் 'இத்தை விளைவித்தல் மலம' என்பதற்கு 'உலகத்தை மறைத்துச் சிவத்தை மறைக்காது நிற்குமாற்றால், இப்பேரின்ப அநுபவம் விளைதற்கு மறைமுகமாக ஏதுவாக மலத்தின் செயல்' என உரை யெழுதினார் ஒருவர். x உயிருண் கின்ற எம்மானே' y 'என்னை முழுக்க விழந்த விடத்தே தன்னை விளக்கிய சாலிள சைக்கோன்' z 'என்னை யெடுத்து விழுங்கி யெனக்கே தன்னை யளித்தருள் தத்துவநாதன்' என்பன அருள் மொழிகள். அவற்றால் முத்தான்மாவின் நிலை அறியப்படும். அங்ஙனம் சிவத்தால் உண்ணப்பட்ட, சிவத்தில் தன்னை முழுக்க இழந்த, சிவத்தால் விழுங்கப்பட்ட அவ்வான்மா அன்றே உலகை மறந்தது அல்லது நீத்தது. நீக்கப்பட்ட வுலகை மலம் மறைத்ததாம். மலத்துக்கு அது வீண் வேலை. அவ்வான்மாவுக்கும் அதனாற்

---

x என்பே உருக நின் அருள் அளித்துன்
இணைமலர் அடிகாட்டி,
முன்பே என்னை ஆண்டு கொண்ட
முனிவா முனிவர் முழுமுதலே
இன்பே அருளி எனையுருக்கி
உயிருண்கின்ற எம்மானே,
நண்பே யருளாய் என்னுயிர்
நாதா நின்னருள் நாணாமே.

(திருவாசகம், எண்ணப்பதிகம் 3)

y என்னை முழுக்க விழந்த விடத்தே
தன்னை விளக்கிய சாலிள சைக்கோன்
மன்ன முத்தினை வானவ ருண்ண
வுன்னு விடத்தினை யுண்டமை யென்னே.

z என்னை யெடுத்து விழுங்கி யெனக்கே
தன்னை யளித்த ருடத்துவ நாதன்
மின்னி ளசைப்ப திமேவி யிடத்தே
கன்னியை வைத்த கருத்திது வென்னே.

(ஸ்ரீமத் சிவஞான சுவாமிகள் இயற்றிய
இளசைப் பதிற்றுப் பத்தந்தாதி - 47, 42)

பயனில்லை. மலம் சிவத்தை மறைக்கவிலையாம். அம்மறைப்பாகிய திரைச்சீலை ஆன்மாவுக்கா? சிவத்துக்கா? ஆன்மாவின் பெத்தத்தில் மலம் சிவத்தைத்தான் மறைத்து வைத்திருந்தது. முத்தியில் அம் மறைப்பை எடுத்துவிட்டது என்ற கருத்துப்பட அவ்வுரை யிருக்கிறது. மலத்துக்குச் சர்வ கர்த்திருத்துவ முண்டென்பது அவர் கொள்கையோ என்னவோ?

முத்தியின்ப விளைவிற்கு மலம் மறைமுகமான ஏது என்றது அவ்வுரை. யாருக்கு அது மறைமுகம்? முத்தான்மாவுக்கா? சிவத்துக்கா? இருவருக்குமேயா? அஃது உலகைத்தான் மறைத்தது; தானும் மறைமுகமாக நின்று ஏதுவாவா னேன்? வெளிமுகமாயிருந்தே ஏது வானா லென்ன? ஒருக்கால் சிவன் முகமாயிருந்த முத்தான்மா அதனை உதறிவிட்டுத் தன்முகமாயிடுமோவென அம்மலம் அஞ்சியதோ? மலம் மறைமுகமாக யிருந்து ஏதுவாதல்போல அதனால் மறைக்கப்பட்ட உலகமும் ஏதுவாகுமெனச் சொன்னாலென்ன? மலம் முத்தான்மாவுக்குச் சிவத்தை மறைக்கவில்லை யென்றால் பெத்தான்மாவுக்கு மறைத்தது என்பதாகும். அவ்வான்மா மலத்தோடன்றோ போராட வேண்டும்? அது சிவத்தின் தயவை நாடவேண்டுவதேன்? சிவத்தை மறைக்காது என்பதற்குப் பெத்தத்தில் சிவத்தை யறியவொட்டாது ஆன்மாவி னறிவை மறைத்தது, முத்தியில் ஆன்ம அறிவு சிவத்தைக் காணுமாறு அவ்வறிவைவிட்டு விலகிற்று மலம் என்பது கருத்தாயின் அம் மறைப்பைச் சிவம் நீக்கி ஆன்மாவை ஆட்கொள்ளவில்லை யென்பது பெறப்படாதா? மலத்தை மறைத்துச் சிவத்தை மறைக்காது நிற்குமாற்றால், இப் பேரின்ப அனுபவம் விளைதற்கு மறைமுகமாக ஏதுவாதல் உலகத்தன் செயல் என அவ்வுரையை மாறி எழுதினாற் குற்றமாவ தெப்படி? அதுவும் ஒரு மலந்தானே? இன்ன பல சங்கைகள் இன்னும் எழக்கூடும். அவற்றிற்கெல்லாம் சமாதானம் அவ்வுரையிற் கிடைக்குமெனச் சொல்ல முடியாது. ஆகலின் அவ்வுரை ஏற்புடைத்தன் றென்பதே சித்தம்.

சித்தாந்த சைவ ஆசாரியன்மாரியன் திருவடிகளில் உளம் ஒன்றிய பக்தி விசுவாசம் வேண்டும். கண் திறப்பது அதுவே. ஆகலின் அவர்களை உதாசீனம் பண்ணற்க. எவரும் தம் அறிவுத் திறமையே பிரதானம் எனக் கொண்டு செருக்கற்க. சித்தாந்த பிரமாண நூல்கட்குப் புத்துரைகள் காணமுயலும் எம்போல்வார் அப்பணிவில் தவறினால் அவ்வுரைகளுந் தடுமாறுவது உறுதி.

முத்தி நெறி

51. அப்பாவிம் முத்திக் கழியாத காரணந்தான்
செப்பா யருளாலே செப்பக்கே - ளொப்பில்
குருலிங்க வேடமெனக் கூறிலிவை கொண்டார்
கருவொன்றி நில்லார்கள் காண்.

அப்பா	- ஆசாரிய மூர்த்தியே!
இம் முத்திக்கு	- இம் முத்தியையடைதற்கு
அழியாத	- நிலையான
காரணம்	- வாயிலை
அருளால்	- தயை கூர்ந்து
செப்பாய்	- கூறி யருள்வீராக

(என வேண்டினார் சீடர், ஆசிரியரும் யாம்)

செப்ப - கூற
கேள் - (நீ) கேட்பாயாக (என்றார்)
ஒப்பு இல் - நிகரில்லாத
குரு லிங்க வேடம் என - குரு லிங்க சங்கம வழிபாடே (அவ்வாயில்) என்று

(வேதாகமங்கள்)

கூறில் - கூறியிருக்குமானால்
இவை - இவ்வழிபாடுகளை
கொண்டார் - செய்து வருஞ் சீலர்
கரு ஒன்றி நில்லார்கள் - மீண்டும் பிறவார்.
காண் - (இவ் வுண்மையை) அறிவாயாக.
தான், ஏ அசைகள்.

குரு லிங்க சங்கம வழிபாடே முத்தி மார்க்கம். சங்கமமாவது மெய்யடியார்.

பத்தி நெறி

52. கற்றா மனம்போற் கசிந்துகசிந் தேயுருகி
யுற்றாசான் லிங்க முயர்வேடம் - பற்றாக
முத்தித் தலைவர் முழுமலத்தை மோசிக்கும்
பத்திதனி னின்றிடுவர் பார்.

(அன்றியும்)

உயர் - ஊர்த்துவ கதியை யருளுகின்ற
ஆசான் லிங்கம் வேடம் - குரு முதலிய மூவரையும்
முத்தித் தலைவர் - சீவன் முத்தர்
பற்று ஆக -பற்றுக் கோடாகக் கொண்டு
உற்று - பொருந்தி
கன்று - தன் இளங்கன்றை நோக்கி
ஆ - குழைகிற பசுவின்
மனம் போல் - உள்ளம் போல

(அம் மூவரிடமும்)

கசிந்து கசிந்து - கரைகடந்த பத்தியால்
உருகி - உள்ளம் நெகிழ்ந்து
முழு மலத்தை - எல்லாப் பாசங்களையும்
மோசிக்கும் - நீக்குதற்குச் சாதனமாகிய
பத்திதனில் - பக்தி மார்க்கத்தில்
நின்றிடுவார் - உறைந்து நிற்பார்
பார் - (இதை) அறிவாயாக

குரு லிங்க சங்கம வழிபாட்டில் கரை கடந்த பத்தி கலந்து கிடப்பதே முத்திப்பேற்றிற்குத் தலையாய சாதனமாகும்.

சீடர் ஆசாரியரைத் துதித்தல்

53. வாழ்ந்தே னருட்கடலே வற்றாப் பவக்கடலில்
வீழ்ந்தே யலையாமன் மேதினியிற் - சூழ்ந்துவிடா
வெண்ணைச் சுவேதவன மெய்கண்ட நாதனே
யுண்மைத் தவப்பயனே யுற்று.

வெண்ணை - திருவெண்ணெய் நல்லூரில்
(மெய்யடியார் தரிசிக்க)
சூழ்ந்து - வந்து
விடா - (பிறகு) விட்டுப் பிரியா திருக்கும்படி
(அவர்பால் கருணை வழங்கும்)
சுவேதவன - சுவேதவனப் பெருமாள் என்னும் பிள்ளைத் திருநாம முடையவரே!
மெய்கண்ட நாதனே - மெய்கண்ட நாதன் என்னுந் தீட்சா நாமமுடையவரே!
உண்மைத் தவப்பயனே - மெய்த் தவத்தின் பயனாகக் கிடைக்கக் கூடியவரே!
அருள் கடலே - கிருபா சாகரரே!
(அடியேன்)
மேதினியில் - பூமியில்
வற்றா - ஓயாத
பவக் கடலில் - பிறவிக் கடலில்
வீழ்ந்து - அழுந்தி
அலையாமல் - சீரழியாமல்
(உமது திருவடி மலரை)
உற்று - பற்றி நின்று
வாழ்ந்தேன் - பேரின்ப வாழ் வெய்தினேன்.

வீழ்ந்தே என்பதிலுள்ள ஏ அசை.

வேத சிவாகமோக்த சைவ சித்தாந்த ஞான மொன்றே சர்வான்மாக்களுக்கும் சுத்தாத்வைதானந்த மென்னும் இறவாத இன்பத்தை யருளவல்லது. அந்த ஞானத்தை உபதேசித்தருளினார் ப்ரமாசாரியராகிய ஸ்ரீ மெய்கண்ட நாதர்; கேட்டார் சற்சீடராகிய மனவாசகங் கடந்தார். அச் சீடர் அதனால் மகிழ்மீக் கூர்ந்து அவ்வா சாரியரின் திருவடித் தாமரைகளை நெஞ்சார வணங்கித் துதிக்கின்றார்.

உண்மை விளக்கம் புத்துரை
முற்றிற்று.

ஸ்ரீ மனவாசகங் கடந்தார் திருவடி வாழ்க.
ஸ்ரீ சிவஞான சுவாமிகள் திருவடி வாழ்க.

உ

பிற்சேர்க்கைகள்

புறப் பூதங்களுக்குரிய வடிவு, நிறம் முதலியவற்றின் அட்டவணை. (செய்யுள் எண் 4 முதல் 9 முடிய)

புறப் பூதங்கள்	வடிவு	நிறம்	பீஜாக்காரம் அல்லது வித்தெழுத்து	குறி அல்லது அடையாளம்	அதிதெய்வம்	அதிதெய் வங்களின் தொழில்	குணம்	தொழில்
பிருதிவி (மண்)	நாற்கோணம்	பொன்மை	ல	வச்சிராயுதம்	பிரமன்	சிருட்டி	கடினம்	பொருளைத்தாங்கல்
அப்பு (நீர்)	அர்த்தச் சந்திரன்	வெண்மை	வ	தாமரைப்பூ	விட்டுணு	திதி	குளிர்ச்சி	பொருளை நனைத்தல்
தேயு (தீ)	முக்கோணம்	செம்மை	ர	சுவத்திகம் 卐	உருத்திரன்	சங்காரம்	வெம்மை	பொருளை நீறாக்கி ஒன்று படுத்தல்
வாயு (வளி)	அறுகோணம்	கருமை	ய	அறுபுள்ளி	மகேசுரன்	திரோபவம்	சலனம்	பொருளைப் பரப்பலும் குவித்தலும்
ஆகாயம் (வான்)	வட்டம்	புகைமை	ஹ	அமுதபிந்து	சதாசிவம்	அனுக் கிரஹம்	வெளி யாதல்	பொருள்கள் உட்சென்று கலத்தல்

குறிப்பு : பஞ்ச பூதங்கள் : அகப்பூதம், அகப்புறப் பூதம், புறப்பூதம் என மூவகைப்படும்.

1. அகப்பூதம் சூக்கும பஞ்சபூதம் எனப்படும். இவைகள் ஞானேந்திரியங்களிடத்திலே வரும் ஐந்து புலன்களையும் ஆன்மாக்கள் அனுபவிக்கும்படி ஆகாயம் செவியிலும், வாயு மெய்யிலுந், தேயு கண்ணிலும், அப்பு நாவிலும், பிருதிவி நாசியிலும் அவ்விந்திரியங்களுக்கு ஆதாரமாகிச் சூக்கும வடிவாய் உட்பூதங்களாய் நிற்பன.
2. அகப்புறப் பூதங்கள் சரீரத்திலே உள்ளும் புறம்புமாயிருக்கும் தூல பூதங்கள், சரீரத்திலே எலும்பு தலை முதலியன பிருதிவி; இரத்தம் வேர்வை முதலியன அப்பு; அன்னபானாதிகளைச் சீரணிக்கச் செய்வதும், தேகாந்தி நித்திரை முதலியவற்றை உண்டாக்குவதுந் தேயு ; வியானன் முதலியன அப்பு; சமானன் முதலிய தசவாயுக்கள் வாயு; இருதயம் முதலிய தானங்களிலும் எல்லா நாடிகளிலும் வாய் முதலிய துவாரங்களிலும் தசவாயுக்களுக்கும் இடங்கொடுப்பதாயிருப்பது ஆகாயம்.
3. புறப்பூதங்கள் : புறத்தே காணப்படும் மண் நீர் முதலிய ஐந்துமாம். இவை அகப்புறப்பூதங்களினுந் தூலமாயிருப்பன.

உ

தூல சரீரமுண்டான முறைமை எப்படி?

[4-வது செய்யுளின் விளக்க உரை முடிவில் 'உயிர்க்குக் கிடைத்துள்ள தூல உடம்பு அப்பஞ்ச பூத பரிணாமத்தாலானது' என்றதின் விளக்கம்]

பஞ்சீகரணமாவது ஒரு பூதசுவரூபம் இரண்டாகி ஒரு பாதி யந்தப் பூதமாகவேயிருக்க நின்ற பாதி நாலாகி மற்ற நாலு பூதங்களிலும் அந்யோந்யம் வியாபித்திருப்பது. பஞ்ச பூதங்களையும் பஞ்சீகரணப்படுத்த ஸ்தூலபூத பௌதிகங்களாம் - எப்படி யென்னில்,

1. பிருதிவியில்	பிருதிவி	1/2	அஸ்தி	4. வாயுவில்	வாயு	1/2	ஓடல்
"	அப்பு	1/8	மாமிசம்	"	பிருதிவி	1/8	படுத்தல்
"	தேயு	1/8	சர்மம்	"	அப்பு	1/8	நடத்தல்
"	வாயு	1/8	நரம்பு	"	தேயு	1/8	உட்கார்தல்
"	ஆகாயம்	1/8	ரோமம்	"	ஆகாயம்	1/8	தாண்டல்
2. அப்புவில்	அப்பு	1/2	மூத்திரம்				
"	பிருதிவி	1/8	உமிழ் நீர்				
"	தேயு	1/8	வியர்வை				
"	வாயு	1/8	உதிரம்	5. ஆகாயத்தில்	ஆகாயம்	1/2	மோகம்
"	ஆகாயம்	1/8	சுக்கிலம்	"	பிருதிவி	1/8	ராகம்
3. தேயுவில்	தேயு	1/2	நித்திரை	"	அப்பு	1/8	துவேஷம்
"	பிருதிவி	1/8	பசி	"	தேயு	1/8	பயம்
"	அப்பு	1/8	தாகம்	"	வாயு	1/8	லச்சை
"	வாயு	1/8	ஆலசியம்				
"	ஆகாயம்	1/8	சங்கமம்				

உ

இந்திரியங்களும் அவற்றின் தொழிலும் - அட்டவணை

[உண்மை விளக்கம் செய்யுள் 11 முதல் 15 முடிய]

இந்திரியங்கள்		எங்கு நின்று?	எதன் வாயிலாய்?	என்ன தொழில் செய்யும்
ஞானேந்திரியங்கள்	கன்மேந்திரியங்கள்			
சோத்திரம் (செவி)		சத்த தன்மாத்திரை யினிடமாக நின்று	செவியாகிய உறுப்பின் வாயிலாய்	சத்தமாகிய விடயத்தை அறியும்
	வாக்கு (வாய்)	"	வாயாகிய உறுப்பின் வாயிலாய்	பேசும் (வசனம்)
தொக்கு (தோல்)		பரிச தன்மாத்திரை யினிடமாக நின்று	தோலாகிய உறுப்பின் வாயிலாய்	பரிசமாகிய விடயத்தை அறியும்
	பாதம் (கால்)	"	பாதமாகிய உறுப்பின் வாயிலாய்	போக்கு வரவு செய்யும் (கமனம்)
சட்சு (பார்வை கண்)		உருவ தன்மாத்திரை யினிடமாக நின்று	கண்ணாகிய உறுப்பின் வாயிலாய்	உருவமாகிய விடயத்தை அறியும்
	பாணி (கை)	"	கையாகிய உறுப்பின் வாயிலாய்	ஏற்றல் இடுதல் செய்யும் (தானம்)
சிங்ஙுவை (நா)		இரச தன்மாத்திரை யினிடமாக நின்று	நாக்காகிய உறுப்பின் வாயிலாய்	இரசமாகிய விடயத்தை அறியும்
	பாயுரு (குதம்)	"	குதமாகிய உறுப்பின் வாயிலாய்	மலமுதலியன வெளிப்படுத்தும் (விசர்க்கம்)
கிராணம் (மூக்கு)		கந்த தன்மாத்திரை யினிடமாக நின்று	மூக்காகிய உறுப்பின் வாயிலாய்	கந்தமாகிய விடயத்தை அறியும்
	உபத்தம் (குறி)	"	உபத்தமாகிய உறுப்பின் வாயிலாய் (ஆ.பெ.குறிகள்)	சுக்கில சோணிதங்களை வெளிப்படுத்தும் (ஆநந்தம்)

தன்மாத்திரைகள் - விளக்கம்

(செ. 14)

வல்லோசை மெல்லோசை முதலிய சிறப்பு வகை ஓசைகளை யெல்லாம் உள்ளடக்கிப் பொதுமையால் ஓசை மாத்திரையாய்ச் சூக்குமமாய் நின்றது.	சத்த தன்மாத்திரை
அவ்வோசையோடு கூடத் தட்பம் வெப்பம் பரிசங்களையெல்லாம் உள்ளடக்கிப் பொதுமையால் பரிச மாத்திரையாய்ச் சூக்குமமாய் நின்றது	பரிச தன்மாத்திரை
ஓசை, பரிசம் ஆகிய அவ்விரண்டனோடு கூட வெண்மை செம்மை முதலிய சிறப்பு வகை உருவங்களை யெல்லாம் உள்ளடக்கிப் பொதுமையால் உருவ மாத்திரையாய்ச் சூக்குமமாய் நின்றது	உருவ தன்மாத்திரை
ஓசை பரிச, ரூபம் ஆகிய அம்மூன்றனோடு கூடத் தித்திப்பு புளிப்பு முதலிய சிறப்பு வகைச் சுவைகளையெல்லாம் உள்ளடக்கிப் பொதுமையாற் சுவை மாத்திரையாய்ச் சூக்குமமாய் நின்றது.	ரச தன்மாத்திரை
ஓசை, பரிசம், ரூபம், ரசம் இந்நான்கனோடு கூட நறு நாற்றம் தீ நாற்றம் என்னும் இருபகுதிச் சிறப்பு வகைக் கந்தங்களை யெல்லாம் உள்ளடக்கிக் பொதுமையாற் கந்த மாத்திரையாய்ச் சூக்குமமாய் நின்றது.	கந்த தன்மாத்திரை

(சிவஞான பாடியம் 2. சூ. 2 அதி தன்மாத்திரை பாரா 3.)

பஞ்ச பூதங்களின் குணங்கள் விளக்கம்
(செய்யுள் 10)

பிருதிவிக்கு	5 குணங்கள்	சத்தகுணம்	கடினத்தைத் தெரிவிப்பதாகிய 'கடகட' ஒலி.
,,		பரிசகுணம்	தட்பமும் வெட்பமுமில்லாத பரிசம்.
,,		உருவகுணம்	வெண்மை முதல் பலநிறம்.
,,		இரசகுணம்	அறுவகைச் சுவை.
,,		கந்தகுணம்	நறுமணமும் தீமணமும்.
அப்புவுக்கு	4 குணங்கள்	சத்தகுணம்	ஒழுகுதலைத் தெரிவிப்ப தாகிய 'சளசள' ஒலி.
,,		பரிசகுணம்	தட்பம்.
,,		உருவகுணம்	வெண்மை.
,,		இரசகுண ம்	தித்திப்புச் சுவை.
தேயுவுக்கு	3 குணங்கள்	சத்தகுணம்	எரிதலைத் தெரிவிப்பதாகிய 'தமதம' ஒலி.
,,		பரிசகுணம்	வெப்பம்.
,,		உருவகுணம்	ஒளிநிறம்.
வாயுவுக்கு	2 குணங்கள்	சத்தகுணம்	ஊர்தலைத் தெரிவிப்பதாகிய 'கசகச' ஒலி.
,,		பரிசகுணம்	தட்பமும் வெப்பமுமில்லாத பரிசம்.
ஆகாயத்திற்கு	1 குணம்.	சத்தகுணம்	நீர்த்தரங்கம் போலத் தாரை தாரையாய்த் தோன்றும் எதிரொலி மாத்திரையே.

(பாஷ்யம் 2. சூ. 2. அதி. பிருதிவி 222)

உ

திருச்சிற்றம்பலம்

தத்துவ முறை விளக்கப் படம்

(செய்யுள் 4 to 21)



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீமத் சிவஞான சுவாமிகள் திருவடி போற்றி !



'சித்தாந்த சைவ நன்மணி'

சிவஸ்ரீ. சு. இரத்னவேலன்